1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS, JAFFNA
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு வைகாசி மாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 17-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சென்றவியாழக்கிழமைமுதல் மின்னல்முழக்கத்துடன் இடையிடையே மழை பெய்துகொண்டு வருகின்றது. மழைக்கோலம் இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது. என்றாலும் புழுக்கமோ குறைந்தபாடில்லை. சிலதினங்களாகப் பெய்துவந்த மழையாலே அனலைதீவுமுதலாம் சிலவிடங்களில் புகையிலைக்கன்றுகளுக்கும், சலாபம், மட்டக்களப்பு ஆகியாமிடங்களிலே நெற்பயிர்களுக்கும் சேதம்ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### மொழிபெயர்ப்பு யந்திரம்

பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபையிலே மொழிபெயர்பு யந்திரம் ஒன்றை அமைக்கும்பொருட்டு எழுபதினாயிரம்ரூபா அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தயந்திரத்தின் உதவிகொண்டு சிங்களப்பாஷையில் நடத்தும் பேச்சுகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பது சுலபமாவதுடன் சுவபாஷைகளில்நடத்தும் பேச்சுகளை அங்கத்தவர்கள் தங்களுக்குத்தெரிந்த பாஷைகளில் விளங்கிக்கொள்ளவும் முடியுமெனத் தபால்—தந்தி மந்திரியார் தெரிவித்திருக்கின்றார். இன்னும் எட்டுமாதங்களில் இந்தயந்திரம் சனப்பிரதிநிதிகள்சபை மண்டபத்தில் பொருத்தப்படுமெனத் தெரியவருகிறது.

### 609 பேருக்குத் தண்டனை

பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபை சென்றதிங்கட்கிழமை கூடியபோது, அதிலே கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பாதுகாப்பு–வெளிநாட்டு மந்திரி காரியாலய பாராளுமன்றக் காரியதரிசியான திரு. வி. நல்லையா அவர்கள் பதில்அளித்தபோது, சென்ற 1953-ம் ஆண்டு ஆவணிமாதம் 2-ந் திகதியன்றுநடந்த வேலைநிறுத்த—அதாவது ஹார்த்தால் சம்பந்தமாய் 1,247 பேர்மீது வழக்குத்தொடரப்பட்டதென்றும், இவர்களிலே 1,114 பேர்மீது தொடரப்பட்டிருந்த வழக்குகள் விசாரணைசெய்யப்பெற்று 609 பேர் தண்டிக்கப்பட, 505 பேர் விடுதலையடைந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

### பத்துலட்சம் ரூபாவுக்குமேல்

அரசாங்க கைத்தொழில்முயற்சிகள் சென்றவருடத்திலே பத்துலட்சம்ரூபாவுக்குமேல் நஷ்டம் அடைந்திருப்பதாகக் கைத்தொழிற்தலைவர் திரு. ஆர். ஏ. விஜயக்கூன் அவர்கள் தமதுபரிபாலன அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார். ஆனால், சென்றவருடத்திலே காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை 16,72,521 ரூபா ஆதாயம் தந்திருக்கிறது.

### அடைக்கலத்திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்திலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அர்ச். சூசைமாமுனிவரின் அடைக்கலத்திருநாள் இம்மாதம்16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோலக் கொண்டாடப்படுமென்பதை அத்திருமாதவனின் பக்தர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

### இலங்கை இந்திய காங்கிரஸ்

இலங்கை இந்தியகாங்கிரஸின் பதினைகாவது வருடாந்த மகாநாடு கம்பளையிலே விசேஷவிதமாக நிறுவப்பட்ட "அசோக நக"ரில் சென்ற வியாழக்கிழமை ஆரம்பமாகி நடந்தேறியது. கம்பளைத்தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரான திரு. எம். டபிள்யு. ஆர். டி சில்வா அதனைத் திறந்துவைத்தார். இந்தமகாநாட்டின் மூன்றாவதுநாள் கூட்டத்திலே இலங்கை இந்தியகாங்கிரஸ் எனும் நாமம் "இலங்கை ஜனநாயக காங்கிரஸ்" என்று மாற்றப்படவேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது.

### ஓர் பலாக்காயால்

அரநாயகவைச்சேர்ந்த தெல்லாக எனும்கிராமத்திலே சென்றஞாயிற்றுக்கிழமை பி. அந்திரீஸ் என்பவனின் தோட்டத்துக்கு அவனுடையஉறவினனை ஹார்மானிஸ் என்பவன்சென்று அங்குநின்ற பலாமரத்திலிருந்து பலாக்காய்ஒன்றைப் பறித்தபோது, இருவருக்குமிடையில் தகாறுஏற்படவே, அந்திரீஸ் ஓர்உலக்கைகொண்டு ஹார்மானிஸை அடித்துவிட்டானாம். அடியினால் படுகாயமடைந்த ஹார்மானிஸ் அபாயகரமானநிலைமையில் கண்டிஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு அங்கேமரணமாயினன். அந்திரீஸ் பொலிசாரால் கைதுசெய்யப் பட்டிருக்கிறான்.

### குடியேற்ற திட்டங்கள்

கிளிநொச்சிக்குச்சமீபமானகல்மடுக்குளம், அக்கரையன்குளமாகிய இரு குடியேற்ற திட்டங்களுக்கும் குடியேற்றப்படும்ஆட்கள் சென்ற 1-ந்திகதி சனிக்கிழமை தெரிவுசெய்யப்பட்டார்கள். இத்தெரிவு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெறலாயிற்று. அக்கரையன்குளத் திட்டத்தின்கீழ் 23 காணித்துண்டுகளும், கல்மடுக்குளத் திட்டத்தின்கீழ் 45 காணித்துண்டுகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நடுத்தர வகுப்புக்குரிய திட்டங்களாகும். அரசாங்க பகுதிகளிலும், வர்த்தக ஸ்தானங்களிலுமுள்ள சில்லறை உத்தியோகஸ்தர்கள்முதல் படித்தவர்கள்ஈறாக 2,500 பேருக்கு மேற்பட்டவர்கள் இக்காணிக்கு விண்ணப்பஞ் செய்திருந்தார்கள். வடமாகாண அரசாங்க ஏசன்றும், உதவிஏசன்றும், யாழ்ப்பாணக் காரியாதிகாரியும் ஆட்களைத் தெரிவுசெய்தார்கள்.

### தமிழிலே நன்றியுரை

சுதந்திரமண்டபத்திலே எலிசபேத் மகாராணியார் பாராளுமன்றத்தை ஆரம்பித்துவைத்து நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கத்துக்குத் தமிழிலே நன்றியுரை கூறப்படாததையிட்டுச் சென்ற திங்களன்றுகாலை கூடிய அரசாங்க பாராளுமன்றகட்சிக் கூட்டத்திலே விவாதிக்கப்படலாயிற்று. பிந்த அக்கூட்டத்திலே சனப்பிரதிநிதிகள் சபைமுதல்வரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களின் கைச்சாத்தைக் கொண்ட அறிக்கைஒன்று விடுக்கப்பட்டது. அதிலே தமிழில் நன்றியுரை கூறப்படாததையிட்டு அரசாங்க பாராளுமன்றகட்சி வருந்துகின்றது; அவ்வாறு செய்தது எண்ணிச்செய்தஓர் கருமமன்று; தற்செயலாக நிகழ்ந்த தவறாகும்; நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் தமிழும்ஒன்றாகுமெனத் தமிழ்பேசும் மக்களுக்கு இந்தக்கூட்டம் மீண்டும் உறுதிகூறுகிறதென அறிவிக்கப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் நீதிமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வி. குமாரசாமிஅவர்கள் கொண்டுவந்த பிரேரணைபற்றி நடைபெற்ற விவாதத்திலே அதில் சமுகமாயிருந்த தமிழ்அங்கத்தவர்கள் சகலரும் கலந்துகொண்டார்கள்.

### காகிதத் தொழிற்சாலை

வாழைச்சேனையிலே அமைக்கப்பட்டுவரும் காகிதத்தொழிற்சாலையில் யந்திரங்கள் பூட்டப்பட்டுள்ள பகுதியிலே ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்ட கடதாசிகள்கொண்டு சீமெந்துப் பைகள் தயாரித்து எழுத்துகளும் பொறிக்கப்படுகின்றன. அடுத்தவருடத்திலே இத்தொழிற்சாலையில் கடதாசிகள் செய்யப்படுமெனத் தெரியவருகிறது. அதற்கானவேலைகள் துரிதமாகநடைபெறுகின்றன.

### மாவரிபற்றிய விசாரணை

யாழ்ப்பாணத்திலே மாவரித்திட்ட நடைமுறைபற்றி விசாரணைசெய்வதற்கென்று நியமிக்கப்பட்டுவந்த விசேஷ கம்மிற்றியானது யாழ்ப்பாணநகரிலும், சங்கானை, ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, நீர்வேலி, சாவகச்சேரிமுதலாம் இடங்களிலும் பத்துநாட்களாகத் தொடர்ந்து விசாரணைநடத்திவிட்டுக் கொழும்புக்குத் திரும்பியிருக்கிறது. பல்வேறுசங்கங்கள், தூதுக்கோஷ்டிகள், யூனியன்களின் பிரதிநிதிகளாய் 72பேர் இந்தக்கம்மிற்றிமுன் சாட்சியமளித்திருக்கின்றனர். பல்வேறு இடங்களிலும் அறிவிக்கப்பட்ட சாட்சியங்களைக் கவனிக்குமிடத்து, இன்றுநடைபெறும் மாவரிமுறையானது சனங்களிடையே குடிப்பழக்கத்தை அதிகரிக்கச்செய்திருக்கிறதென்று பொதுவாக அபிப்பிராயம் காண்பிக்கப்பட்டிருப்பது அவதானிக்கத்தக்கதாகும்.

### இந்தியஅரிசி கிடைக்குமா ?

இந்தியா தற்போது இலங்கைக்கு அரிசி ஏற்றுமதிசெய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறதென்று இந்திய உணவுமந்திரியார் சென்ற திங்கட்கிழமை கல்கத்தாவிலே தெரிவித்திருக்கின்றார். பதினைபிரந்தொன் தென்னிந்திய அரிசியை வாங்குவதற்கு இலங்கை வியாபாரிகள்சிலர் விபரங்கேட்டு எழுதியிருப்பதாகவும், அக்காலத்திலே இந்தியாவிலிருந்து இலங்கை பதினைபிரந்தொன்அரிசி இறக்குமதிசெய்து வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### யாழ்ப்பாணமும் காசநோயும்

"யாழ்ப்பாணநகரில் காசநோய் பரவிவரும் விதத்தைக்கண்டு யாழ்ப்பாணநகரசபை கவலைப்படுகின்றது. இதுசம்பந்தமாகக் காசநோயாளிகள் சிகிச்சைபெறும்படி நாள்தோறும் திறந்திருக்கும் ஓர்புதிய சுகாதாரநிலையம் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியில் திறக்கப்படவேண்டுமென்று சென்ற 30-ந்திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நகரசபைக்கூட்டத்தில் வண்ணார்பண்ணைவட்டார அங்கத்தவரான திரு. டி. எஸ். துரைராசா அவர்கள் கொண்டுவந்த ஓர்பிரேரணை ஏகமனதாக அரங்கேறியிருக்கிறது.

### வீடிழந்த குடும்பங்கள்

கொழும்புநகரிலே சென்றவாரம் சிலதினங்களாகப் பெய்த கடுமழைகாரணமாகச் சுமார் 800 குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து தவிக்கலாயின. இக்குடும்பங்களிலே பெரும்பாலானவைகள் பதிந்தநிலப்பகுதிகளாகிய மதம்பிட்டியா, வனத்தமுல்லை, மட்டக்குளி, பாலத்துறைஆகியாம் இடங்களில் வசித்திருந்தன. வெள்ளத்தால் 500 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. 2,500 பேர்வரையில் தங்கள் வீடுகளை இழந்திருக்கின்றனர். நகரிலே அநேக இடங்களில் வீதிகள் நீரில் மூழ்கின. வெள்ள அகதிகளுக்குக்கஷ்டநிவாரணம் அளிக்கும்படி கொழும்பு நகரசபை 25,000 ரூபா அனுமதித்துள்ளது.

### கருப்பநீரும் பனைமரங்களும்

நீர்வேலியிலும், அதன் அயற்கிராமங்களிலும் வசிக்கின்றமக்கள் பனம்பொருள் உற்பத்திச்சேவையில் மிகுந்தகரிசனை கொண்டவர்களாய்க் கருப்பநீர் இறக்குவதற்கென்று சுமார் ஆயிரம் பனைமரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் ஓர்ஆயிரம்பனைகளைப் பெறுதற்கானஒழுங்குகள் செய்யப்படுகின்றன. கருப்பநீரை இறக்குந் தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து தற்காலீகவாசப் பேர்மிற்றுகளுடன் வரவழைக்கப்பட விருக்கின்றார்கள். சர்வோதயஆச்சிரமத்தில் விரைவிலே அமைக்கப்படும் பனங்கட்டித்தொழிற்சாலையில் பனங்கட்டியும், சீனியும் செய்யப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்கநேரத்தில் சம்பாவனை அளிப்பார்

சேவியர் சுவாமியார் பட்டணத்திலிருந்து கால்டன்ஹில் என்னும் பட்டிக்காட்டுக்குப் பங்குக்குருவாக மாறினார். அவர் ஆத்தும இரட்சணிய ஆவல் நிறைந்தவர். ஏராளமான நன்மை செய்யப் பட்டணத்தில் சந்தர்ப்பங்கள் இருந்தன. அங்கிருந்து தம்மை மாற்றினதுபற்றித் தொடக்கத்தில் அவருக்கு விசனமே. புதுப்பங்கில் அவருடைய சனங்கள் சிதறுண்டு பற்பல கிராமங்களில் வசித்தனர். சிலர் மலைப் பகுதியில் வீடுகட்டிவாழ்ந்தனர். ஒருவர் தப்பாமல் அவர் எல்லோரையும் போய்ச் சந்தித்து வந்தார். சிறுவர்களுக்குப் பாடசாலையை ஆரம்பித்தார். வேதகாரியங்களில் அசமந்தராயிருந்தவர்கள் அடிக்கடி கோவிலுக்கு வரும்படிசெய்தார்.

அவருடைய வாழ்க்கையைக் கவனித்தபலர் புரொட்டஸ்தாந்தசபையை விட்டுக் கத்தோலிக்க திருச்சபையிற் சேர்ந்தனர். அவர்களில்ஒருத்தி லாஸி என்னும் வயோதிபப்பெண். அவள் பணக்காரி. திவ்வியநற்கருணைமேல் அவளுக்கு மிகுந்தபக்தி. கடவுளின் சிறியவீடாகிய கோவிலை அலங்கரிக்க அவள் தன்னாலானதெல்லாம் செய்தாள். தன்னிடமிருந்த தங்கநகைகள், வைரமாலைகள், இரத்தினங்கள் ஆதியனகொண்டு ஓர்அழகிய சற்பிரசாத கதிர்ப்பாத்திரத்தைச் செய்து, அதைக் குருவானவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தாள். ஒரேஒரு நிபந்தனைமாத்திரம். தமதுதெய்வீக எசமானைப் பிரமாணிக்கத்துடன் பின்பற்றிய சேவியர்சுவாமிக்கே அது கொடுக்கப்பட்டது. ஆதலின் அவரை வேறிடத்துக்கு மாற்றினால் அவர் போகுமிடமெல்லாம் அதைத் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டும். இந்த நிபந்தனையின்படி நடப்பது கடினமல்ல. அதனால் சரிஎன்று சுவாமியார் ஒப்புக்கொண்டார்.

அந்தக் கதிர்ப்பாத்திரம் அபூர்வ அழகு வாய்ந்தது. அதை வைப்பதற்கென அந்தப்பெண் ஓர் இரும்புப்பெட்டியும் செய்துகொடுத்திருந்தாள். பெட்டிச்சாவி எப்பொழுதும் சுவாமியாரிடமே இருக்கும். அவரே அதைத்திறப்பார். கதிர்ப்பாத்திரத்தை எடுத்துப் பீடத்தில் வைப்பார். ஆசீர்வாதம் முடிந்தபின் அவரே அதைத் திரும்பக் கொண்டுசெல்வார். இரும்புப்பெட்டியை மூடுமுன் சிலசமயங்களில் நெடுநேரம் கதிர்ப்பாத்திரத்தைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருப்பார். அதைக் கொடுத்தபெண்ணும் இறந்துபோனாள். அவளுடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காகப் பிரார்த்திப்பார்.

இருள் அடர்ந்த ஓரிரவில் வேலைக்காரன் அவரிடம் வந்து: "சுவாமி, மலையில் வசிக்கும் கிறேஎன்பவர் வியாதியாயிருக்கிறார்; கடைசித் தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்ற நீங்கள் வரவேண்டுமாம்; ஓர் ஆள்வந்து அறிவித்துவிட்டுப் போகிறான்" என்றான். திவ்விய நற்கருணையையும், பரிசுத்த எண்ணெயையும் தம்முடன் எடுத்துக்கொண்டு, இரும்புப் பெட்டியின் சாவியை உட்சட்டைப்பையில் போட்டுக்கொண்டு சிலநிமிஷங்களில் அவர்புறப்பட்டார். கூப்பிடவந்த ஆளைத்தேடினார். காணோம். கிறேஎன்பவரின் வீட்டுக்குச் செல்லும்பாதை செங்குத்தானது. போகிறவழியில் யாரோ தமக்குப்பின் நடந்துவருகிற சப்தங்கேட்டுக் குருவானவர் திரும்பிப்பார்த்தார் ஒருவரையும் காணோம். வெறும் ரூபிகாம் என்று நினைத்துக் கொண்டார்.

வீட்டை அடைந்து கதவைத் தட்டினார். கடும்வியாதியாய் இருந்ததாகச் சொல்லப்பட்ட கிறேவந்து கதவைத் திறந்தார். அவர் நல்லசுகத்துடன் இருந்தார். குருவானவருக்கு ஆளனுப்பியதே இல்லை. "யாரோ குறும்பு செய்திருக்கிறான்; அவனைக் கண்டுபிடித்துச் சரியான தண்டனை கொடுக்கிறேன்" என்று கிறேமொழிந்தார்.

உடனே சுவாமியார் புறப்பட்டார். திரும்பிவரும்போதும் முன்போல யாரோ பின்னால்நடந்த சப்தம்கேட்டது. "யார் அங்கே?" எனக்கேட்டார். பதில்இல்லை. சில ஆண்டுகளுக்குப்பின் அவர் ஒருபட்டணத்துப் பங்குக்கு மாறினார். அவர் தம்முடன் அந்தஅழகிய கதிர்ப்பாத்திரத்தையும் கொண்டுசென்றார். நாற்பதுமணி ஆராதனையின்போது மலர்கள், மெழுகுதிரி, வெளிச்சம் இவற்றின் மத்தியில் கதிர்ப்பாத்திரத்திலிருந்த கற்கள் சொலித்தன. "சின்ன யேசுவின் நட்சத்திரங்கள்" அவைகள் என்று ஒருசிறுவன் கூறினான்.

ஒருநாள் சுவாமியார் ஆஸ்பத்திரிக்குப்போய் புதுநோயாளிகள் யாராவது வந்திருக்கின்றனரா என்று விசாரித்தார். "சுவாமி, ஒருவன் வந்திருக்கிறான்; கத்தோலிக்கன் எண்கிறான்; பாவசங்கீர்த்தனஞ்செய்யமறுக்கிறான்" என்று நேர்ஸ்கூறி, ஒன்பதாம் நம்பர்க் கட்டிலைச் சுட்டிக்காட்டினாள். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்என்று அவர் கூறிவிட்டு அவனை அணுகிக் காலைவந்தனங்கூறி, அவன்அருகில் உட்கார்ந்தார்.

நோயாளியின்பெயர் பற்றிக். தன் வரலாற்றை அவன் கூறினான். இருபது ஆண்டுகளாகப் பார்சிக எண்ணெய்ச் சுரங்கங்களில் உழைத்தவன். அந்தக்காலமெல்லாம் குருவானவரை அவன் பார்த்ததேயில்லை என்றான்.

"நீ இப்பொழுது குருவானவரைப் பார்க்கிறாயல்லவா? பாவசங்கீர்த்தனம் செய்தாலென்ன?" என்று சுவாமியார் மொழிந்தார்.

"சுவாமி, இருபது ஆண்டுகளில் செய்தபாவங்களை ஒருமணிநேரத்தில் சொல்லமுடியுமா?" என்றான் பற்றிக்.

"குருவானவர் பொறுமையுடன் உட்கார்ந்து பாவசங்கீர்த்தனங் கேட்டார். உணவருந்தும்நேரம் வருமுன் இருபதுவருடப் பாவங்களையும் கேட்டு முடித்தார். நோயாளி சப்தமாகச் சிறுசிறு செபங்களைச் சொல்லிக்கொண்டிருந்தான். வெகுநாட்களாகத் தனதுவாழ்க்கையினின்று ஒதுக்கிவைத்திருந்த கடவுளை வெகுமரியாதையுடன் மறுநாட்காலை உட்கொண்டான். அவனைச் சுவாமியார் அடிக்கடி பார்க்கவந்தார். சுகமானதும் அவருடையகோவிலில் வேலைசெய்யவருவதாகப் பற்றிக் கூறினான்.

அவனுடைய கட்டிலுக்கருகில் படுத்திருந்த ஒருநோயாளி நடந்ததெல்லாவற்றையும் கவனித்தான் அவன்யாரிடமும் பேசமாட்டான். ஒருநாள் குருவானவர் அந்தப்பக்கமாய்ச் செல்கையில், "உங்களுடன் பேசவேண்டும்" என்றான். "பதினைந்துஆண்டுகளுக்குமுன் நீங்கள் கால்டன் ஹில் என்னும் கிராமத்தில் இருந்தீர்கள் அல்லவா?" என்றுகேட்டான்.

"ஆம், இருந்தேன்; ஆனால், அங்கு உன்னைப்பார்த்த ஞாபகமில்லையே" என்று குருவானவர் பதிலளித்தார்.

"நீங்கள் என்னைப்பார்த்ததே கிடையாது; என்சரித்திரத்தைக் கேட்டு, என்சந்தேகத்தைத் தீர்த்துவையுங்கள்; உங்கள்சபையில் புதிதாய்ச் சேர்ந்திருந்த லாஸிஎன்னும் பணக்காரி உங்களுக்கு விலையுயர்ந்த ஒருகதிர்ப்பாத்திரத்தைக்கொடுத்திருந்தாள்அல்லவா? அதில் ஏராளமான வைரங்களும், இரத்தினங்களும், முத்துக்களும் இருந்தன. அது ஓர் இரும்புப்பெட்டியில் இருந்தது; அதைக்களவாட நான்முயன்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

### களிகூர்ந்தகாரணிக்கம்

### 4-ம் காரணிக்கம் — 7-ம் பிரியதத்தம்

### 37. தேவ தோத்திரப் பாடல்

சிமியோன் தமதுகரங்களில் திவ்விய பாலகனை ஏந்தியபிரகாரம் ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்துகிறார். ஆண்டவருடைய கிறீஸ்துவைக்கண்ட அக்களிப்பால் பேரானந்தங்கொண்டுபோற்றித்துதித்துப் பாடுகின்றார். எங்ஙனமெனில்:

"பாற்கடல்என் உள்ளப் பதும மலர்
அரும்ப
நூற்கடலே ஈங்(கு)உதித்தாய் நும்
மலர்க்கண் முத்தரும்ப"

பாற்கடலிலே மலர்ந்த தாமரை மலரைப்போல எனதுமனம்என்னும் தாமரைமலரும்படி (என்உள்ளப் பதுமமலர் அரும்ப) வேதநூல்முதலிய நூலெல்லாம் அடங்கக்கொண்ட கடலாகிய நீ உன்திருவிழிகளாகியமலர் துன்பமிகுதியால் முத்துக்களாகிய நீர்த்துளிகளைப் பொழிந்து அழும்படி இவ்வுலகத்தில் மனுமகனாகப் பிறந்தாய். அங்ஙனமாக:

"நும்மலர்க்கண் முத்தரும்ப நோய்
செய் வினைசெய்தேம்
எம்மலர்க்கண் முத்தரும்ப இன்று
வினைதீர்த்தாய்"

உன்திருவிழிகளாகிய மலர்கள் முத்துக்களாகிய நீர்த்துளிகளைப் பொழிந்து அழும்படி நாங்கள் துன்பத்தைவிளைக்கும் பாவங்களைச்செய்தோம். இப்பொழுதோ எமதுவிழிகளாகிய மலர்கள் இன்பமிகுதியால் முத்துக்களாகிய ஆனந்த நீர்த்துளிகளைப் பொழிந்து களிக்கும்படி எமது பாவவினைகளைத் தீர்த்திரட்சித்தாய்.

"வினைதீர்ப்ப எய்தி வினை சொண்டாய்
பாவப்
புனைதீர்ப்ப ஈங்குமனுப் பூட்சிச்
சிறைகொண்டாய்"

பாலகனே! என்தீவினையைத்தீர்த்து இரட்சிக்கும்படி இவ்வுலகத்தில் அவதரித்துவந்து (ஈங்கெய்தி) என்பொருட்டு நீ துன்பங்களைக் கொண்டாய். பாவத்தினால் எனக்குவந்த சிறையைத்தீர்த்து மீட்கும்படி (பாவப்புனைதீர்ப்ப) நீ எடுத்த மனிதசரீரத்தைச் சிறையாகக் கொண்டாய்.

"பூட்சிச் சிறைகொண்ட புல்லென்
உயிர்போய்உன்
காட்சிச் சிறைகொண்டு கண்டேன்
கதிநிலையே"

சரீரமாகிய சிறையைக் கொண்ட (பூட்சிச்சிறைகொண்ட) எனது அற்பமாகிய உயிரும் (என்புல்உயிர்) உன்தயையை ஆராய்ந்தடைந்த இன்பமிகுதியால் உன்னைக் கண்ணுற்கண்ட காட்சியையே இரண்டு சிறகாகக்கொண்டு (காட்சிச்சிறைகொண்டு)பறந்துபோய்ப் பரமகதியின்நிலையைக் கண்டவன் போலானேன்.

"கண்டேன் கதிநிலையே கண்(டு)உயிர்
என் பூண்பல்இனி
உண்டேன் உயிராய்அன்(பு) உன்
னடியைச் சூடினேன்"

தேவசுதனாகிய உன்னைக்கண்டதினால் (கண்டு) பரமகதியின் நிலையைக் கண்டவன்போலானேன், இனிமேல் ஏன் இவ்வுயிரை வைத்துக்கொண்டிருப்பேன் (இனிஉயிர்என்பூண்பல்) உன் அன்பை எனக்கு உயிராகக்கொண்டேன். உனதிதிருப்பாதங்கள் இரண்டையும் தலைக்கோர் அணியாகச் சூடிக்கொணடேன்.

"உன்அடியைச் சூடி உனைஅணுகான்
தன்வினையே
தன்அடியைச் சூழ்ந்(து)உதைப்பச்
சுட்டெரிவீழ்ந் தாழ்வானே"

உனதுபாதங்களைத் தலைக்குஓர் அணியாக அணிந்து, உன்னை அடைக்கலமாகச் சேராதவன் தன்னுடைய பாவந்தானே (தன்வினையே) தன்னுடைய காலைக் கட்டிக்கொண்டு உதைத்துத் தள்ளுவதினால் எரிகின்ற நரகத்தீயில் வீழ்ந்து மீளாமற்கிடப்பான்.

இங்ஙனமாகச் சிமியோன்முனிவர் அன்று திவ்வியபாலகனைக் கரங்களில் ஏந்தி அவர் தேவசுதனேஎன்று சாட்சி பகரலானார்.

"ஆண்டவரே! உம்முடையவாக்கியத்தின்படியே உம்முடைய தாசனை இப்பொழுது சமாதானத்தோடு போக விடுவீர். ஏனெனில், தேவரீர் சகல சனங்களுக்கும் முன்பாக ஏற்படுத்தின உம்முடையஇரட்சிப்பை எங்கண்கள் கண்டுகொண்டன. இவரே புறச்சாதிகளுக்குப் பிரகாசிக்கின்றஒளி, உமது சனமாகிய இசிறவேலருக்கு மகிமை" என்றார். (லூக் 2; 28—31)

பாற்கடலென் னுள்ளப்
பதும மலரும்ப
நூற்கடலே யீங்குதித்தாய்
நும்மலர்க்கண் முத்தரும்ப
நும்மலர்க்கண் முத்தரும்ப
நோய்செய் வினைசெய்தே
மெம்மலர்க்கண் முத்தரும்ப
வின்று வினைதீர்த்தாய்.

வினைதீர்ப்ப வெய்தி
வினைகொண்டாய் பாவப்
புனைதீர்ப்ப வீங்குமனுப்
பூட்சிச் சிறைகொண்டாய்
பூட்சிச் சிறைகொண்ட
புல்லென் னுயிர்போயுன்
காட்சிச் சிறைகொண்டு
கண்டேன் கதிநிலையே.

கண்டேன் கதிநிலையே
கண்டுயிரென் பூண்பலினி
யுண்டே னுயிராயன்
புன்னடியைச் சூடினே
னுன்னடியைச் சூடி
யுனையணுகான் றன்வினையே
தன்னடியைச் சூழ்ந்துதைப்பச்
சுட்டெரிவீழ்ந் தாழ்வானே.

— இத்தாலியிலே டெல்லா ஜினேஸ்றா நகரில் சமீபத்திலே சிஞ்ஞோர்ஜேம்ஸ் மியூசியோ என்பவர் தனது 72-ம் வயதில் காலஞ்சென்றார். இத்தாலிய இரத்தோபகாரிகளில் இவர் முதன்மையானவர். 50 வருடங்களிலே இவர் தனதுசரீரத்திலிருந்து 500 முறை இரத்தம் உதவியிருக்கின்றார்.

— எலிசபேத்மகாராணியார் தமது சாம்பிராச்சிய சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு லண்டன்நகருக்குத் திரும்பவிருக்கும்நாளுக்கு மறுநாளாகிய வைகாசிமாதம் 16-ந் திகதியன்று வெஸ்ற்மினிஸ்றர் அதிமேற்றிராதனத்திலுள்ள சகல கோவில்களிலும் தேவதோத்திரபாடர்பூசை நிறைவேற்றித் "தெதேயும்" பாடப்படவேண்டுமெனக் கருதினால் கிறிவ்வின் ஆண்டவர் அஞ்ஞாபித்திருக்கின்றார்.

— தென்னாபிரிக்காவிலே பெசுவானுலாந்தைச்சேர்ந்த செறூவிஎனுமிடத்துக்குச் சமீபமாக ஒருகுதிரைக்கும், இருசிங்கங்களுக்குமிடையே நிகழ்ந்த உக்கிரசண்டையில் குதிரையே வெற்றியடைந்ததாம். அது தலையில்உதைந்த ஓர்உதையால் ஒருசிங்கம் உடனே தானே இறந்தது. மற்றச்சிங்கத்தை அதுகாயப்படுத்திப் புறங்காட்டி யோடச்செய்தது. குதிரையும் மோசமாகக் காயமடைந்தபோதிலும் குணப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் எச்சரிக்கின்றார்

தமது பாஸ்குத்திருநாள் செய்தியிலே பரிசுத்தபாப்பரசர் அணுக்குண்டுகள், கொள்ளைநோய்களைப் பரவச்செய்யும் விஷக்கிருமிக்குண்டுகள், ரசாயனகுண்டுகளைப் பிரயோகித்து நடத்தும் யுத்தத்தைத் தடைசெய்யக்கூடிய சர்வதேசஉடன்படிக்கை ஏற்படும்பொருட்டுத் தாம்இடையறாது முயன்றுவருவதாக உறுதிவாக்கு அளித்திருக்கின்றார். அணுக்குண்டுகள், ரசாயனகுண்டுகளைப் பிரயோகித்துநடத்தும யுத்தமானது மிகப்பிரமாண்டமான தேசப்பகுதிகளிலே சகலசீவன்களையும பரிகாசஞ்செய்து, ஆகாயத்தையும், தரையையும், கடலையும் அசுசியாக்கிக் கெடுத்து, மிகப்பெரும் தேசப்பரப்புகளை மக்கள் சஞ்சரிக்கமுடியாமற் செய்துவிடுமென்பதைப் பட்டவர்த்தனமாக அவர் எடுத்துக்கூறிஎச்சரிக்கைசெய்தார். சகலருக்கும்பிறர்சிநேகம்காண்பிப்பதாகிய கிறீஸ்துவ ஒழுங்குமுறையிலேயே சமாதானம்உண்டாகுமென அழுத்தமாக அவர்தெரிவித்துக்கொண்டார். இந்தச் செய்தியை அவர்விடுத்தபின் சம்பேதுருவானவர் மகாலயமேல்மாடியின்மத்திககு உறுதியாக நடந்துசென்றபோது, அங்கு கீழே மகாலயசதுக்கத்தில் நிறைந்துதேங்கித் தைபர்நதிக்கரைவரையிலே பரந்துநின்ற சுமார் மூன்றுலட்சம் மக்களும் "பாப்பரசர் வாழ்க!" என்று மேகமுழக்கம்போன்று அவரை வாழ்த்தினின்றார்கள். அத்தாலே தாம் சௌக்கியமடைந்திருப்பதையும், தமது பலவீனமும், வெளுவெளுப்பும நீங்கிவிட்டதையும் பிரத்தியட்சமாகக் காண்பித்தார். அதன்மேல் றோமைநகருக்கும், உலகத்துக்கும் பாரம்பரியமான ஆசீர்வாதம்வழங்கினார். அவ்வேளை பேசுவதற்கு ஓர்சந்தர்ப்பத்தை அருளியதற்காகத் தாழ்மையுடன சர்வேசுரனுக்கு நன்றித்துதிகூறினார். தாம் குணமடையும்படியாக மன்றாடியவர்களாய் உலகமுழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான கத்தோலிக்கமக்களுக்கும் நன்றி பாராட்டினார்.

## பிரான்சியமக்களின் மனு

ஓர்பத்திராசிரியராய் விளங்கிப் பரிசுத்தவாழ்க்கைநடத்திப் பரமபதம் அடைந்தவரான மாறியஸ் கோனின்என்பவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளுதற்கான விசாரணையைத் தொடக்குமாறு பரிசுத்த ஸ்தானத்துக்கு மனுப்பண்ணுதற்கான இயக்கம்ஒன்றைப் பிரான்சிய கத்தோலிக்கமக்கள் தொடக்கியிருக்கின்றார்கள். இவருடையதந்தை ஓர்குதிரைவண்டிச் சாரதியாய்இருந்தார். தாய் ஓர் வீட்டு வேலைகாரியாய் இருந்தாள். "சமுதாய வாரங்கள்" என்ற இயக்கத்தை இவர் உடனின்று அடியிட்டு நடத்திவந்தார். தனது ஐம்பதாம் ஆண்டு நிறைவுவிழாவை இவ்வருடத்திலே இது கொண்டாடுகின்றது. தற்போது இந்தச் "சமுதாய வாரங்கள்" பதினேழு நாடுகளில் ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன.

## கத்தோலிக்கரின் அன்பளிப்பு

சித்திரகொத்து வேலைப்பாடுகளிலே பிரசித்திபெற்ற டான் பிளின் எனும் ஆஸ்திறேலியகத்தோலிக்கர் ஆஸ்திறேலியாவிலுள்ள பட்சிகள், மிருகங்களின் பிரதிரூபங்களெல்லாம் பொறிக்கப்பட்ட ஒருதொகையான வெள்ளிக்கரண்டிகளைச் சாள்ஸ் இளவரசருக்கும், ஆன் இளவரசிக்குமென்று எலிசபேத்மகாராணியாருக்கு அன்பளிப்புச் செய்திருக்கின்றார். அலங்கார வேலைப்பாடமைந்த பூசைப் பாத்திரங்கள்செய்வதிலே இவர் சிறந்ததேர்ச்சி பெற்றவர். மெல்போண்நகரில் நிகழ்ந்த கைத்தொழில்-கைப்பணிக் காட்சியிலே இவர்செய்த பாத்திரம் ஒன்று காட்சிப்பிரியர்களின் மனதை வெகுவாகக் கவர்ந்துகொண்டது. மற்றோர்பூசைப் பாத்திரம் இவர்சகோதரரான வண. லேயோ பிளின்சுவாமியார் 1945-ம் ஆண்டு தமதுமுதற் திவ்வியபூசையை நிறைவேற்றியபோது அவரால் பிரயோகிக்கப்படலாயிற்று.

## பாலத்தின்மேல் திருச்சிலுவை

ஜேர்மனியிலே மூனிச்நகரில் இஸார்ஆற்றின் மேலாகப் பாலம்ஒன்றுள்ளது. தற்கொலைசெய்யமுனைகிறவர்கள் இந்த இடத்தையே அதிகமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். அதனால்இதனைத் தடைசெய்யும் ஓர்ஈறாந்த நடவடிக்கையாக அங்குள்ள கத்தோலிக்க ஆடவர்களின் ஸ்தாபனம்ஒன்று பதினைந்து அடிஉயரமான அறையுண்ட திருச்சிலுவை ஒன்றை அந்தப்பாலத்தின்மேல் ஸ்தாபித்திருக்கிறது. இதனைச் சமீபத்திலே மூனிச்நகர் உதவிமேற்றிராணியாரான நியூஹோஸ்லர் ஆண்டவர் ஆசீர்வதித்தனர்.

# திருக்காயங்கள் பதியப்பெற்ற மாது

பவேரியநாட்டிலே கொன்னேர்ஸ்றாத் எனும் பட்டினத்தில் நமதுஇரட்சகரின் திருக்காயங்கள் தனதுசரீரத்தில் அற்புதமாகப்பதியப்பெற்ற தெரேசா நியூமன்எனும் ஜேர்மனியபெண்மணியைத் தரிசிப்பதற்காக இம்முறையும் பன்னூற்றுக்கணக்கான யாத்திரிகர்கள் அங்குசென்றிருந்தார்கள். சிலுவையில அறையுண்டபோது கிறீஸ்துநாதர் தமது திருச்சரீரத்தில் அனுபவித்த மரணவேதனைகளைக் கண்காணக்கூடியதாக இவளும் ஒவ்வோர் பெரியவெள்ளிக்கிழமையன்றும் அனுபவித்து வருகின்றாள். கடந்த 27 ஆண்டுகளாக வருடந்தோறும் இவ்விதம் நடந்துவருகிறது. இவள்சமீபத்திலே இரத்தவோட்டக் கோளாறும், 'இன்புளுவென்சா' எனப்படும் குளிர்சுரமுங்கண்டு அபாயகரமான நிலைமையில்இருந்து தற்போது சிறுகச்சுகமடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. என்றாலும இவள் படுக்கையைவிட்டு இன்னுமே எழுந்திருக்கவில்லை. சென்றவருடம் இவள் தன்னுடையசிரசு, கண்கள், கரங்கள, பாதங்களிலிருந்து இரத்தம்பொசியக் கண்காணக்கூடிய பரவசத்தில் இருந்தபோது, பதினாயிரவருக்கு மேற்பட்டமக்கள் அவளுடைய படுக்கையின் பக்கமாக வரிசையாகச்சென்று அவளைப்பார்த்துச்சென்றார்கள்.

## முத். பத்தாம் பத்திநாதரின் திருமேனி

முத். பத்தாம்பத்திநாதர் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பட்டபின் அவர் திருமேனியானது றோமைநகர் வீதிகளினூடாக அர்ச். மேரிமஜோர் மகாலயத்துக்கு ஊர்வலமாகக் கொண்டுபோகப்பட வேண்டுமென்று மரியாயின்வருடக் கம்மிற்றியின் தலைவரான திறாக்கிளியா அதிமேற்றிராணியார் செய்தவேண்டுகோளைப்பரிசுத்த பிதா அங்கீகரித்திருக்கின்றார். அதனால் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படும் நாளுக்கு மறுநாளாகிய இம்மாதம் 30-ந் திகதியன்றுகாலை சம்பேதுருவானவர் மகாலயத்தில் பெரியபாடற்பூசைநிறைவேறியதும் இந்த ஊர்வலம் நடந்தேறுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏலவே அறிவித்துள்ளபடி சம்பேதுருவானவர் ஆலயசதுக்கத்தில் நடந்தேறும் திருவைபவத்தின்போது பரிசுத்தபாப்பரசர் முத். பத்தாம்பத்திநாதரை அர்ச்சியசிஷ்டராகப் பிரகடனஞ்செய்து, மறுநாள்நிறைவேறும் திவ்வியபூசைக்குத் தலைமைவகிப்பார். முத். பத்திநாதரின் கல்லறை சம்பேதுருவானவர் மகாலயத்திலே காணிக்கைமாதா பலிபீடத்தின்கீழ் இருந்துவருகின்றது.

## புரொட்டஸ்தாந்த கோவில்கள்

ஜேர்மனியிலே பேர்லின்நகர் மேற்றிராசனத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள—அதாவது கம்யூனிஸ்த ஆட்சிப் பகுதியிலுள்ள 700 புரொட்டஸ்தாந்த கோவில்களிலே தற்போது திவ்வியபூசை நிறைவேறிவருகிறது. ஓர்காலம் முற்றாகப் புரொட்டஸ்தாந்தர்கள்வசித்திருந்த இப்பகுதியில் சிலேசியாவிலும், செக்கோசிலவாகியாவிலும இருந்துபோன கத்தோலிக்கஅகதிகள் சென்று ஆங்காங்கு பல்வேறிடங்களிலும் குடியேறியிருக்கிறார்கள். இந்தஅகதிகள் தங்களுக்கென்று கோவில்கள்கட்டப் பணமின்றியிருப்பதாலே அங்குள்ள புரொட்டஸ்தாந்தர்கள் அவர்களின்பாவனைக்கென்று தங்கள் சொந்தக்கோவில்களை விட்டுக்கொடுத்திருக்கின்றார்கள். இரண்டாவது உலகயுத்தம் முடிந்தபின்னர் மேற்குஜேர்மனியிலும் இத்தகையஓர்நிலைமை ஏற்படலாயிற்று. அப்போது யுத்தத்தினாலே தங்கள்கோவில்கள் அழிக்கப்பட்டிருந்த கத்தோலிக்கர்மட்டிலே அங்குள்ள புரொட்டஸ்தாந்தர் உபசாரசீலராய் அவர்களுக்குத்தங்கள்கோவில்களை விட்டுக்கொடுத்தார்கள். ஆனால், அங்கே அழிந்துபோனகோவில்களைத் திரும்பக் கட்டியெழுப்பும்வேலை தற்போது தீவிரமாக நடைபெற்றுவருகின்றது. கிழக்குஜேர்மனியிற் போலக் குறுக்கிட்டு முட்டுக்கட்டையிடக் கம்யூனிஸ்தஅரசாங்கம் இங்கில்லை.

# ஆனிமாசம் 13-ந் திகதியன்று

ஓர்நோயாளியான இத்தாலியகுருவானவர். தாம்மரிக்க ஆறுவாரங்களின்முன் முழுந்தாளிலிருந்தே தமது கடைசிப் பிரசங்கத்தைச் செய்தவர். 'கலறா'எனப்படும் பேதிநோய் பரந்தபோது ஒருமுறைக்குப் பலமுறை தமக்குஏற்படக்கூடிய சீவஅபாயத்தையே பறுவாய் பண்ணாது அஞ்சாநெஞ்சராய்ச் சென்று நோயாளர்களைப் பராமரித்துவந்தவர். இவர் வருகிற ஆனிமாதம் 13-ந் திகதியாகிய ஞாயிற்றுக்கிழமை அர்ச். அந்தோனியார் திருநாளன்று அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படவிருக்கின்றார். இவரே கத்தோலிக்க அப்போஸ்தலத்துவ — அதாவது பலத்தீனிய குரு[illegible]யை அடியிட்டவரான முத். வின்சென்ற் பலத்தீன் சுவாமியவர்கள். பேதிநோய் பரந்தகாலத்திலே இவர் நோய்கண்டவர்களைச் சந்தித்துவிட்டுப் பலமுறையும் வெறுங்காலுடன் மேலங்கியில்லாமலே தமது வாசஸ்தலத்துக்குத் திரும்புவார். ஏனெனில், அவைகளை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவார். ஓர்முறை மரணப்படுக்கையிலிருந்த வாலிபன் ஒருவனை இவர் காணவிரும்பினார். ஆனால், அவனோ ஆராவது ஓர்குருவானவரைக்கண்டால் உடனே சுட்டுக்கொல்வதாகச் சத்தியஞ்செய்திருந்தான். அதனால் சுவாமியார் ஓர் பெண்பிள்ளையைப் போல மாறுவேடந்தரித்து, அவனின் படுக்கையண்டை போய்ச்சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேதபாதுகாவலன்

### வைகாசிமாதம்

**போதுக்கருத்து** :— ரூஷியமக்கள் தேவதாயாரான மாசற்றமரியாயின் வழியாய் நாஸ்திககொடுமையிலிருந்து விடுதலையடையும்படியாக வேண்டிக் கொள்வது.

**மிஷன்கருத்து** :— மகமதியர் தெய்வீக சிநேகப் பெருக்கத்தைத் தெரிந்துகொள்ளும்படியாக மன்ருடிக் கொள்வது.

**1954-ம் ஆண்டு**
**வைகாசி மாதம் 6-ந் திகதி**

## கோறியா — இந்தோசீனு

கோறியாவின் எதிர்காலஅரசியலை ஒழுங்குபடுத்துவதற்கும், யுத்தத்தாலே பாழடைந்துவருகின்ற இந்தோசீனுவில் சமாதானத்தை உண்டுபண்ணுவதற்குமாகச் சுவிற்சர்லாந்துதேச ஜெனிவாநகரில் கூடியிருக்கும் பத்தொன்பதுநாடுகளின் மகாநாடு இன்னமும் நடந்துகொண்டேயிருக்கின்றது. கொழும்புநகரில்கூடிய தென்கிழக்குஆசியநாடுகளின்—அதாவது, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, பர்மா, இலங்கைஆதியநாடுகளின் பிரதமர்கள்கூடிய மகாநாடு முடிவடைந்துவிட்டது. இதனைத்தென்கிழக்குஆசியாவில்வாழும் அறுபதுகோடிமக்களின் பிரதிநிதிகள் மகாநாடுஎன்றும் சொல்லலாம். இதன்விளைவாகப் "புதியஆசியாதோன்ற அடிகோலப்பட்டிருக்கிறது; ஆசியாவைஅலட்சியஞ்செய்த அந்நியநாடுகள் இப்போது ஆசியநாடுகளை மதித்துக் கொழும்புமகாநாட்டின் தீர்மானங்களை வரவேற்கின்றன" என்று இந்தியப்பிரதமர் நேரு பொழிப்பாகக் கூறுகின்ருர். ஆனல், இவ்விதம் அடிகோலப்பட்டிருப்பதும், தீர்மானங்கள் வரவேற்கப்படுவதும் செயலளவிலே—இன்றையஉலகநிலைமையிலே நிறைவேறுமானல் இந்தப்பிரதமர்களின் மகாநாடு இணையற்றதொன்ருய்உலகசரித்திரத்தில் இடம்பெறுமெனக் காத்திருக்கலாம். ஆனல், தென்கிழக்காசிய பிரதமர்களின்மகாநாடு ஆசியாவிலே சமாதானத்தை நிலைநாட்டும் விஷயமாய் இன்று முட்டுக்கட்டையாகக் குறுக்கிட்டுநிற்பது இந்தோசீனயுத்தமென்பதை நாம் மறந்துவிடப்படாது.

"இந்தோசீனுவில் நடந்துவரும்யுத்தம் ஜனநாயக வாழ்க்கை முறைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து; பலாத்காரத்தை உபயோகித்து ஆட்சிப்பீடம் ஏறுவதற்காகச் சிலர் போட்டுவரும் திட்டமாகும்; அங்கு ஏதோ சாதாரண உள்நாட்டு யுத்தம் நடைபெறுகிறதென்றுதான் நாம் எண்ணிக்கொண்டிருந்தோம்; ஆனல், இப்பொழுது இந்தோசீன ஓர் சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டது; இந்தப் பிரச்சினையின்பலனைக எத்தனையோ ஆபத்துகள்நேர இடமிருக்கிறது" என்று பிரதமர் கொத்தலாவல இந்த மகாநாட்டின் ஆரம்பத்திலே குறிப்பிட்டிருக்கின்ருர். அதனல் இந்தோசீனுவில் யுத்தம்நிறுத்தப்பட்டுச் சமாதானம் ஏற்படவேண்டும்; அந்நாடு விடுதலையடையவேண்டும்; அந்நாட்டிலே எந்தக் குடியேற்றநாட்டு அரசாங்கமும், கம்யூனிஸ்தநாடும் தலையிடக்கூடாதென்று பிரதமர்கள்ஐவரும் தங்கள்மகாநாட்டில் தீர்மானித்திருப்பது பாராட்டத்தக்கதே. ஆனல், இந்தத்தீர்மானத்தை நிறைவேற்றிவைப்பது யார்? என்பதே — அதாவது, பூனைக்கு மணிகட்டுவது யார்? என்பதே இப்போது பிறந்திருக்கும் கேள்வியாகும். இந்தோசீனு இன்று மற்ருேர்கோறியாவாகக் காட்சியளிக்கின்றது. இந்தோசீனுவிலே நடந்தேறிவரும் ஏழுவருடயுத்தத்தை நிறுத்துவதற்காக வியெற்னமின் ஒருபகுதியைக் கம்யூனிஸ்த வியெற்மினின் ஆதிக்கத்தில் கையளிப்பதுபற்றி யோசனைநடப்பதாகச் செய்தி பரந்திருக்கிறது. இதனைஅறியவந்ததே "வியெற்னமுக்குச் சுதந்திரமும், ஐக்கியமும்அருளப்படவேண்டும்; சுதந்திரம் அல்லதுமரணம்" என்று வியெற்னமிலே கிளர்ச்சியெழுந்திருக்கிறது. வியெற்மினுக்குக் கம்யூனிஸ்தசீனு படைபண்டாரங்களைப் பெருந்தொகையாக அனுப்பிவைப்பதைக் கண்டனஞ்செய்வார் எவருமில்லை. வியெற்னமிலே ஒருபெரும்பகுதியை விழுங்கிக்கொள்ளுமாறு வியெற்மின் தீவிரயுத்தம் நடத்துகின்றது. அவ்வாறு விழுங்கிக் கொள்ளுகிறவரையிலே ஜெனிவாமகாநாடு இழுபட்டுக்கொண்டுபோக ரூஷியா உபாயந்தேடுகிறது. பின்னர் யுத்தநிறுத்தம் ஏற்பட்டதும் கோறியாவிற்போன்று எல்லைக்கோடுஇடப்பட்டு வடக்கேகம்யூனிஸ்தஇந்துசீனு, தெற்கே ஜனநாயக இந்துசீனுவென்று அது இரண்டாகத் துண்டிக்கப்படுமானல் எவருமே ஆச்சரியப்படவேண்டியதில்லை.

இன்றுகோறியா இரண்டாய்ப்பிரிந்து கிடக்கின்றது; அதனை முன்போல ஒன்ருக்கவேண்டும்; அங்கு ஒரேஆட்சி நடைபெறவைக்கவேண்டுமென்பது ஜெனிவா மகாநாட்டின் நோக்கங்களில் ஒன்ருகும். இதுவிஷயமாய் வட — தென் கோறியா முழுவதிலும் ஏகபோகமாகத் தேசிய பொதுத்தேர்தல் ஒன்று நடத்தவேண்டுமென்று கம்யூனிஸ்த வடகோறிய அரசாங்கம் நிற்கின்றது. ஆனல், தென்கோறிய ஜனநாயக அரசாங்கமோ கம்யூனிஸ்தசீனு தனதுபடைகளை வடகோறியாவிலிருந்து தருவித்துக் கொண்ட பிறகு தென்கோறிய பாராளுமன்றத்தில் காலியாயிருக்கும் நூறுஸ்தானங்களுக்குமாக வடகோறியாவில்தான் தேர்தல்நடைபெறவேண்டுமெனச் சாதிக்கின்றது. ஏகபோகமாகத் தேசிய பொதுத்தேர்தல் நடத்திக் கம்யூனிஸ்தர்களுடன் ஏகபோகமாகக் கூட்டுறவுஆட்சி நடத்துகிறதானல், கடைசியாகப்போலாந்து, செக்கோசிலவாகியா, ரூமேனியா, ஹங்கேரி ஆதியாம் நாடுகளைப்போலவே கோறியாவின் நிலைமையும் ஏற்பட்டுக் கம்யூனிஸத்தால் விழுங்கப்படுமெனஅது எடுத்துக் காட்டுகின்றது. இன்று பத்தொன்பதுநாடுகள் கூடியிருக்கும் ஜெனிவா மகாநாட்டில் ரூஷியாவின்கையே ஓங்கிநிற்கின்றது. அமெரிக்கவரசின்கை பின்வாங்கிநிற்கின்றது. அன்று இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமாகுமுன் ஹிற்லரைத் தாக்காட்டுவான் பிரித்தானிய, பிரான்சியஅரசுகள் எவ்விதம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடையனவாய் இருந்தனவோ அவ்விதமே இன்றும் ரூஷியாவைத்தாக்காட்டுவான் இரு அரசுகளும் அதே மனப்பான்மையுடையனவாய்க் காணப்படுகின்றன. அதனல் கோறியா, இந்தோசீனுவிஷயமாய்க் கூடியிருக்கும் ஜெனிவா மகாநாட்டில் ரூஷியாவின் எண்ணமே நிறைவேறவேண்டிய நிலைமையேற்படும். அதற்குச் சுதந்திரநாடுகள் விட்டுக்கொடுக்க இஷ்டப்படுமாஎன்பது சந்தேகம். எனவே, இந்த மகாநாடும் முந்தியபல மகாநாடுகளைப்போலவே பிரதிகூலமாக முடியுமோவென்று சிந்திப்பதில் தவறுண்டா?



## சதாசகாயமாதா கோணம்

### தின்மைசெய்தவன் பெற்றநன்மை

அதிஅன்புக்குப்பாத்திரமான சதாசகாயமாதாவே! நான் உம்மிடமிருந்து பெற்றுக்கொண்ட மகத்தானசகாயத்துக்கு எனது தாழ்மையான எளிய நன்றித்துதியை எழுத்துமூலம் வெளிப்படுத்த மிகவும்கடமைப்பட்டிருக்கிறேன்என மனப்பூர்வமாக உணருகிறேன்.

படுமோசமான இருதயநோய்கண்டு சீவமோசமானநிலைமையிலே சென்ற தைமாதம் 30-ந்திகதி கொழும்புப் பெரியஆஸ்பத்திரியில், 22-ம் இலக்கக் கூடத்திற் சேர்க்கப்பட்டேன். நான் குணப்படுவேன் என்ற நம்பிக்கை எனக்கோ, வைத்தியருக்கோ, அல்லது என்பந்துக்களுக்கோ இருக்கவில்லை. ஆனல், இரக்கமுள்ளதேவன் என்னை இவ்விடம் அனுப்பிவைத்தார். தேவதாயாருக்குஎதிரான — அவளுடைய பத்திவணக்கத்துக்குப் பாதகமான துண்டுப்பிரசுரங்களைப் பரப்பும்முயற்சியில் அமோகமாக ஈடுபட்டிருந்த என் பாதகச்செயலுக்காக மனம்வருந்தவும், மன்னிப்படையவும் காலங்கிடைத்ததையிட்டுச் சந்தோஷப்படுகிறேன்.

கத்தோலிக்க குருவானவர்ஒருவர் என்னிடம்வந்தார். ஆனல், தேவதிரவியஅனுமானங்கள் எதையும் பெற மறுத்துவிட்டேன். மாணத்தின்பயங்கரமானநிழலில் நான் இருந்துகொண்டும், சில கத்தோலிக்க நோயாளிகளுக்கு ஆபாசம்நிறைந்த துண்டுப்பிரசுரங்களைக் கொடுத்தேன். இவ்விதமான என் நடத்தை அவர்கட்கு வியப்பைக் கொடுத்தது. அவர்கள் எனக்காகப் பரிசுத்ததேவதாயாரிடம் உருக்கமாக மன்ருடியிருப்பார்கள்என்று உணருகிறேன்........

எனக்குவியாதி கடுமைப்படுத்தியது ... என்தாயும், இனசனரும் இராமுழுவதும் என்கட்டிலண்டை சுற்றிவாநின்ருர்கள். அருள்மாலையாம் தேவதாயின் செபமாலையை நான் ஒதுக்கித்தள்ளிவைத்து வெகுகாலம். சடுதியாக எனக்கு ஒருசெபமாலை தரும்படிகேட்டேன். கனகாலம் சொல்லாதிருந்த செபமாலையைச் செபித்தேன்........ உத்தமமனஸ்தாபப்பட்டேன்......... ஆத்மசாந்தி கொடுக்கும் பாவசங்கீர்த்தனம் செய்தேன்......... திவ்விய நன்மை பெற்றேன். இத்தனைக்குங் கால் சதாசகாயமாதாவின் அன்பும், இரக்கமும் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

பரிசுத்தகன்னிமரியம்மாளில் முழு நம்பிக்கைவைத்து அவளைத் தஞ்சமென அண்டிச்செல்லும் எவ்வித துரோகிக்கும் பாவமன்னிப்படையவழியுண்டென்று இத்தால் வெளிப்படுத்துவதில் நான்மெய்யாகவே ஆனந்தங்கொள்ளுகிறேன்...........

நான் அடைந்த ஆத்துமசாந்தி ஒருபுறமிருக்க, எனக்குக்கிடைத்த சரீர ஆரோக்கியத்தைப்பற்றி அதிசயப்படாதவர்கள் ஒருவரும்இல்லையென்று சொல்லலாம்.

சதாசகாயமாதாவே! உமதுமகிமை எங்கும்பாவுவதாக! என்பணிவான நமஸ்காரங்களை ஏற்பீராக! நான் உமதுசேத்திரத்தை ஒழுங்காகத்தரிசிக்கவும், உமதுநோவனைகளிற் பங்குபற்றவும் ஒத்தாசைசெய்வீராக!.

[எம்புல்தெனியாவிலுள்ள சலவாவீதியின் 370-ம் இலக்கத்தை முகவரியாகக் கொண்ட திரு. A. B. லபுறேய் என்பவர் "நோவனைப்புதினம்" எனும் ஆங்கில பத்திரிகைக்கு எழுதிஅனுப்பிய நன்றித்துதியின்சாரம்.]

## பொழுதுபோக்கு

டக்றர்— (நோயாளியைப் பார்த்து) நான் கூறிய ஆலோசனைப்படியே அறையின் யன்னல்களையெல்லாம் திறந்துவைத்துவிட்டு நித்திரைசெய்தீர்களா?

நோயாளி— ஆம், டக்றர்.

டக்றர்— மெத்த நல்லது, அப்போ உனக்குஏற்பட்ட சலதோஷம் போய்விட்டதுதானே.

நோயாளி — ஆனல், சலதோஷம் போய்விடவில்லை, டக்றர்; யன்னல்களையெல்லாம் திறந்துவிட்டு நித்திரைசெய்ததாலே எனது உடை, கடிகாரம் சங்கிலியெல்லாம் போய்விட்டன.

* * *

ஆசிரியர் — ஜோண்! ஒரு வேலையை உனதுதகப்பன் ஒருமணித்தியாலத்தில் செய்துமுடிக்கக்கூடும். அதே வேலையை உனதுதாயும் ஒருமணித்தியாலத்தில் செய்துமுடிக்கக்கூடும். சரி, இருவருஞ்சேர்ந்து செய்தால் அந்தவேலையை எவ்வளவுநேரத்தில் செய்துமுடிப்பார்கள்?

ஜோண் — மூன்றுமணித்தியாலத்தில் செய்துமுடிப்பார்கள் சேர்.

ஆசிரியர் — ஏன் அப்படிச் சொல்லுகிருய்?

ஜோண் — அவர்கள் வேலையில் அல்ல ஆனல், சும்மா கலிபிலிப்படுவதில் தான் அதிகநேரம் செலவிடுவார்கள் சேர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பர்மியபிரதமர் யூ-நூ பாப்பரசருக்காகப் பூசைகாண்கிறார்

பர்மாவிலே றங்கூன்நகர் அதிமேற்றிராசனக்கோயிலில் மகாவந். பமேலன் ஆண்டவரவர்கள், பரிசுத்ததந்தையவர்கள் விரைவிலேகுணமடையவேண்டிச் சென்றமாசி 17-ந் தேதியன்று நிறைவேற்றிய திருப்பலிபூசையின்போது பல ஆயிரக்கணக்கான கத்தோலிக்கரும், பர்மாப்பிரதமர் யூ-நூ அவர்களும், மற்றும்பலமந்திரிமாரும, அயல்நாட்டு ஸ்தானிகர்களும் சமுகமாயிருந்தார்கள். அவ்வாரத்தில் வெளிவந்த பர்மியபத்திரிகைகள் எல்லாவற்றிலும் பாப்பரசரின் உடல்நிலைபற்றியும், அதிமேற்றிராசனக்கோயிலில் நிறைவேற்றிய திவ்வியபூசையைப்பற்றியும் முதற்பக்கத்தில் பெரியதலையங்கங்களுடன் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. பர்மாவில் மிகவும் செல்வாக்குப்பெற்றுள்ள தினசரியாகிய 'நேஷன்' என்ற பத்திரிகைபின்வருமாறு எழுதியுள்ளது:

"பர்மாவில் புத்தமதத்தினரான இல்லறத்தார்களுள் மிகஉயர்ந்தபதவி வகித்துவருபவரான பிரதமர் நேற்றைத்தினம் கத்தோலிக்கரின் பூசையில் கலந்து, பாப்பரசர் விரைவிலே குணமடையவேண்டுமென்று தாமும்கோருவதை உணர்த்தியது, பர்மாவிலுள்ள பல ஆயிரக்கணக்கான கத்தோலிக்கருக்கு மிகவும்உற்சாகம் அளித்திருக்கும்என்பது சொல்லாமலேவிளங்கும். பாப்பரசர் கத்தோலிக்கதிருச்சபையின் தலைவராயிருப்பதுமன்றி, வத்திக்கான்என்ற ஒருஇராச்சியத்தின் அதிபராகவுமிருப்பதால, நமதுபிரதமர் அத்திருச்சடங்கில் கலந்துகொண்டது சர்வதேச அரசியற்பழக்கங்களுக்குப் பொருந்தியதேயாகும. ஆயினும் நமதுபிரதமரைப்போலப் பரந்தநோக்கும், மதசம்பந்தமானகாரியங்களில் சகிப்புத்தன்மையும் கொண்டிராத வேறெந்தப் புத்தமதத்தினராவது இவ்வாறு ஒருகத்தோலிக்கஆலயத்திற்குச் சென்றிருப்பாராவென்பது சந்தேகமே. மக்களின்தொகையை எடுத்துக்கொண்டால் பர்மாவில் கத்தோலிக்கர் மிகமிகச் சிறுபான்மையினர். எனவே, தேர்தல்களில் அவர்களுடையதயவை எவரும் எதிர்பார்க்கத் தேவையில்லை. ஆகையால் அன்று நமதுபிரதமர் கத்தோலிக்கஆலயத்திற்குச் சென்றது அரசியல்தந்திரத்தை ஒட்டியல்ல. ஆனால், அவருடைய மனிதத்தன்மையே அவரை அந்தக் கோவிலுக்கு இழுத்துச்சென்றது. கத்தோலிக்கர் தங்கள் மதக்கொள்கைகளின்படி, தங்கள் தாய்நாட்டின்பால் கொண்டுள்ளபற்றையும், விசுவாசத்தையுங்கண்டு அவர் அவர்கள்பால் அன்புகொள்ளாதிருப்பது எங்ஙனம்? அவரை அக்கோவிலுக்கு இழுத்தது, வேறொருகாரணமாகவும் இருக்கலாம். கொஞ்சக்காலத்திற்குமுன் றோமாபுரியில் பாப்பரசரை கேரில்காண வாய்ப்புக்கிடைக்கப்பெற்றஅவர் திருச்சபையின் அமைப்பையும், நிர்வாகமுறையையுங்கண்டு, அச்சபை உலகசமாதானத்திற்காக எவ்வளவு தூரம் முயற்சியெடுத்து வருகிறதென்பதைக் கண்டுணர்ந்திருக்கலாம்.

"அவர் அக்கோயிலுக்குச் சென்று கத்தோலிக்கரின் திருச்சடங்கில் கலந்துகொள்ளக்காரணம் எதுவாயிருந்த போதிலும், உலகெங்குமுள்ள கத்தோலிக்கர் அதற்காக அவரைப் பெரிதும் மதித்து வருவதல்லாமல், பதிலுக்கு அவர்பால் நல்லமுறையில் நடந்துகொள்வார்கள். நமதுபிரதமரின் நடவடிக்கையால் கிறீஸ்தவர்கள் இந்நாட்டில் தங்கள்மதத்தை எவ்விதபயமுமின்றி அனுசரித்துவரலாம் என்ற உணர்ச்சி அவர்களுக்குஏற்பட்டுள்ளது. இத்தகையநிலைமையால் ஒரு சிறுபான்மை வகுப்பினருக்கு மனவமைதியும், மகிழ்ச்சியும் உண்டாவதுமன்றி நாடுமுழுவதுமே அதனல் பயனடைவதாகும்."

---

அர்ச். சூசையப்பரின்

## அடைக்கலத் திருநாள்

### கொழும்புத்துறை

இத்திருநாள் வழமைப் பிரகாரம் கொழும்புத்துறைதாபனத்திலே நிகழும் வைகாசி மாதம் 16-ந் திகதி (16-5-54) ஞாயிற்றுக்கிழமை பக்திச் சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்குச் சமுகந்தரும்படியாய் அர்ச். சூசையப்பரின் பக்தர்களையும், தாபன பழையமாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சிகள்

**15-5-54 சனிக்கிழமை**

மாலை 7-15மணிக்கு மாலைஆராதனையும், தேவமாதாவின் திருச்சுரூப மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரமும்.

**16-5-54 ஞாயிற்றுக்கிழமை**

காலை 6-30 மணிக்குப் பாடற்பூசை. 11 மணிக்குப் பழையமாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

மாலை 4-30மணிக்கு மாலைஆராதனையும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்.

தாபனத்தலைவர்

கொழும்புத்துறை

---

## நம்பிக்கையுடன் போங்கள்

இதனை வாசிக்கும் விருத்தாப்பியரே! மரணம் கிட்டியிருக்கிறதென்று மற்றெவரிலும் பார்க்க அடிக்கடி எண்ணிவருகிற நீங்கள் உங்கள் மரணவேளையில் ஒத்தாசைசெய்ய வல்லமையுள்ள நல்மரணத் தாயாரிடம் நம்பிக்கையுடன் போங்கள்! அவர் உங்களுக்கு அந்தியவேளை வேண்டியஒத்தாசை செய்தருளுவார்.

முற்றும் விருத்தாப்பியராய் இராவிட்டாலும் வயதல் முதியோராய் இருப்போரே! இவ்வளவுகாலம் சென்றும சர்வேசுரனுக்கு இன்னும் சரியாய் ஊழியம் பண்ணவில்லையே; உத்தம கிறீஸ்தவர்களுக்குரிய நன்முன்மாதிரிகை காட்டி நடக்கவில்லையே; இனிமேலாவது திருந்தி நடக்கவேண்டுமென்று ஆவலாயிருக்கிறீர்களே! உங்கள் ஆவலை நிறைவேற்ற உங்களுக்கு உதவிசெய்யக்கூடியவர் யார்என்று எண்ணுகிறீர்களா? சகல நம்பிக்கைக்கும் தாயாராகிய இப்பரிசுத்த கன்னிகையிடம் நம்பிக்கையுடன் போங்கள்! உங்கள் ஆவலை நிறைவேற்ற அவர் உதவி செய்வார்.

சமுசாரிகளே! குடும்பசீவியத்தை உத்தமவிதமாய் நடத்த ஆசிக்கிறீர்களா? புருஷன் மனைவியை நேசிப்பதும், மனைவி புருஷனுக்கு அமைந்து நடப்பதும், இருவரும் தங்கள்பிள்ளைகளைத் தேவனுக்கு ஏற்றவிதமாய், திருச்சபைக்கு ஏற்றவர்களாய், யோக்கியராய், சனமாக்கராய், மோட்சத்துக்குரியவர்களாய் வளர்த்துவருவதுமான புண்ணியங்களைச்செய்ய மனமுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? திருக்குடும்பத்துக்கு அரசியாகிய பரிசுத்த தேவதாயாரிடம் நம்பிக்கையுடன் போங்கள்! அவர் உங்களுக்கு வேண்டியஉதவியைசசெய்தருளுவார்.

வாலர்களே! கன்னியர்களே! உங்கள் ஆபத்தான இவ்வயதிலே தூய்மையான வாலர்களாய், சுத்தமுள்ள கன்னியர்களாய் இருக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? கன்னியர்களில் கன்னியாகிய மோட்ச இராகினியிடம் போங்கள்! அவர் உங்கள் கற்புக்குக் கேடயமாய் இருப்பார்.

என் அருமையான சிறுவர், சிறுமிகளே! பாலர், பாலகிகளே! தேவபாலனை ஆதரித்த அன்புநிறைந்த உங்கள் தாயாரிடம் நம்பிக்கையுடன் போங்கள்! அவர் உங்களை அன்போடு அரவணைத்துக் [illegible] ருளுவார்.

---

## ஈடற்ற இரக்கத்தின் மாதா

### அறுசீர் விருத்தம்

1

விண்ணவர்க்குக் கிட்டாத விருந்தளிக்க வந்துதித்த விமலனுலே
தண்ணிழற்கா மலியுமெழிற் கானுவில் மதுரசமாய்த் தண்ணீர்மாற்றி
மண்ணவர்கள் அதிசயிக்க மணமனையின் தலைவனது மானங்காத்த
எண்ணளவில லாதபெரும் இரக்கமுள்ள எந்தாயர்க் கிடுயாரே!

2

கத்தருக்கு முப்பதிலே கைத்தாதை இறந்துவிடக் கடைசிமட்டும்
புத்திரனின் இரட்சணியப் பாதையிலே பின்நடந்து புன்மைபோக்கி
முத்திதர எங்களுக்காய் முழுவாழ்வும் அர்ப்பணித்த முதல்வியான
அத்தியந்த அருள்பெருகும் அன்னையினை அனையவொரு அணங்குமுண்டோ!

3

மணியாரங் காம்பிளிர மதிமுகத்தே நகையரும்ப மசபியேலில்
பணிவாருக் கருள்சுரக்கப் படர்கொடியிற் பதமூன்றும் பான்மைதோற்றி
பிணிதீர்க்கும் மருந்தாகப் பெருமூற்றைப் பிறப்பித்துப் பெண்ணுல்தந்த
தணியாத இரக்கமுள்ள தாயார்க்குத் தலமிரண்டுந் தகுதியாரே!

4

செபவழியிற் திறம்பாமல் செயம்பெறநற் செபமாலை செகத்திற்கீந்தே
தபவழிக்குத் தங்கடமை தவறுமை தக்கதெனத் தானேகாட்டி
அபரிமித மானகவம் அவனிதனில் புரிந்துதவி அடியார்க்கெல்லாம்
அபாவழி* யடைத்தமலன் அடியடைய அருள்வாளை அனையார்யாரே!

5

மன்னுயிரைப் படைத்தமுதம் அளித்துவரும் மகத்துவஞ்சேர் ஈசனும்
தன்கருணை பெருமளவு காட்டிடினும் தமதுடைய தாழாநீதி
நின்றநிலை பிறழாமற் கடைப்பிடித்துக் குறைகடியும் நீர்மையாலே
எந்நிலையும் இரக்கமருள் எந்தாயாம் மாமரியாய்க் கிடுயாரே!

*அபாவழி = நரகபாதை

'யுவன்' — காம்பொன்

---

## நீலப்படைச் சமாகமம்

### பண்டத்தரிப்பு - பாத்திமாகிரி



பண்டத்தரிப்பு, பாத்திமாகிரியிலே பாத்திமாநாயகி நீலப்படையின் வருடாந்த மகோற்சவம் நிகழும்வைகாசிமாதம் 12-ந் திகதி புதன்கிழமை—அதாவது பாத்திமாநாயகியின் விழாவுக்கு முதனாளாகிய புதன்கிழமை சாயந்தரம் 4 மணியளவில் ஆலய முன்றிலிலே அதிவண. ஹென்றி ஜெலான்ட் சுவாமியவர்கள் தலைமையில் நடந்தேறும். நீலப்படைஅங்கத்தவர்களும், அன்பர்கள் அபிமானிகளும் இந்த மகாவைபவத்தில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

### நிகழ்ச்சிகள்

1. ஆரம்பகீதம்
2. பேச்சுகள்
   (1) அதிவண. ஹென்றி ஜெலான்ட் சுவாமிஅவர்கள் "அமலோற்பவம் நாமே"
   (2) அதிவண. எல். ஏ. அகுஸ்தீன் சுவாமிஅவர்கள் "பொதுவுடைமை"
   (3) வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமிஅவர்கள் "செபமாலை"
   (4) செவாலியர் எஸ். அருளானந்தம், கே. எஸ். ஜி. "தேவதாயாரைப்பற்றிய அறிவு"
   (5) நீலப்படைத் தளபதி பி. எம். வேதநாயகம், பி. ஏ. "சர்வதேசநிலைமையும் நீலப்படையும்"
3. புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் கிருத்தியம்

நீலப்படையைப்பற்றிய பிரசுரங்கள் இலவசமாய் வழங்கப்படும்.

8 மணியளவில் திவ்வியநற்கருணை எழுந்தேற்றம். பிரசங்க விளக்கத்துடன் செபமாலை நடைபெறும்.

12 மணியளவில் மகாவண. மேற்றிராசனபரிபாலனரால் திவ்வியபூசை நிறைவேறும்.

வண. ஜே. எவ். சேவியர் சுவாமிகள்
பிரதம நிர்வாகஸ்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

மப்பு, மந்தாரம், மழை எல்லாம் போய் விட்டன. மாதாவின் மாதம் பிறந்து விட்டது.

தென்றல் வீசுகிறது. மா, வேம்பு, வாகை முதலியன புதுத் தளிர் விட்டுப் பூச் சொரிகின்றன. சிறுவர், சிறுமியர் வனஞ் சென்று, மலர் பறித்து, தார் கோத்து அன்னை மரியின் சென்னியிற் சூட்டி, பாதத்திற் சாத்திப் பணிந்து செல்கின்றனர்.

பொழுது மேற்கை நோக்கிச் சாய, மௌனம் பொலியும் மாலைவேளை, மக்கள் தாயின் பாதஞ் சேர்ந்து, செபமாலை கோத்து மரியன்னையை வாழ்த்துகின்றனர். மோட்ச அலங்காரியின் ஞான அலங்காரத்தைத் தியானிக்கின்றனர். அவருடைய எழிலைத் துதிக்கின்றனர். அருள் பெற்று ஏகுகின்றனர்.

அண்ணா இன்று ஏதோ அந்தரத்திலே பறக்குமாப் போலிருக்கே.

ஆமாம்! தாயின் நினைவு சேயரைச் செட்டை கட்டிப் பறக்கத்தான் செய்யும். இது எங்கள் தாயாருடைய வணக்கமாதம். நீங்கள் எல்லோரும் இந்த வணக்கத்தை அனுசரிக்கிறீர்களா? பாடசாலை ஆரம்பித்து விட்டபடியால் இது உங்களுக்கு இலேசாய் இருக்கும்.

இதை நினைவூட்ட உங்கள் வீடுகளிலும், பாடசாலைகளிலும் மாதாபீடம் அமைத்து, அலங்கரித்து, செபமாலை செபித்து, தாயாரை வாழ்த்துங்கள். சுபம் !

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## நினைவு

'ஜெயம்'

1. காலை உதித் திடிலோ — அம்மா ! உன்
காந்திகொள் மேனியொளி
கோல முகத் தெழிலும் — சொரிந்திடும்
கொள்ளை மகிழ்ச்சி கொள்வேன்

2. நீல விசும் பழகோ — அம்மா ! உன்
நிர்மலப் பொன் னுடையாய்
பால னெனக் குளத்தில் — இன்பத்தீம்
பாலைப் பொழியுதம்மா

3. லீலி மலர் விரிந்தால் — அம்மா ! உன்
நித்தியக் கற்புருதான்
சோலை அகத் தினிலே — எறித்திடும்
சொக்கிக் களித்திடுவேன்

4. மாலை மலர்ந்து விட்டால் — சிரித்திடும்
மாணிக்கத் தாரகைகள்
காலும் மதி நிலவும் — அம்மா ! உன்
காட்சியைக் காட்டுமடி

5. ஞால மெலாம் எனக்கு — அம்மா ! உன்
நல்லுரு காட்டுகின்றாய்
ஓலமிட் டேய ழைத்தேன் — வளர்ந்திட
உற்ற துணைபுரிவாய்

## 'பிதாவிடம் போகிறேன்'

கடைசி இராப்போசனவேளை யேசு சீஷருக்குச் சொன்னார்: "சற்றுவேளையின்பின் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள். இன்னும் சற்று வேளையின்பின் என்னைக் காண்பீர்கள் ஏனெனில் நான் பிதாவிடம் போகிறேன்."

யேசு கூறியவற்றின் கருத்தென்ன? தாம் சீக்கிரமாக இறந்துபோவாரென்றும், தம்மைச் சீஷர் சற்றுவேளை காண மாட்டார்கள் என்றும் கருத்து. அவர் மோட்சம் போகும் பொழுது அவர்கள் அவரைக் கடைசியாகக் காண்பார்கள்.

"இவர் என்ன சொல்லுகிறார்" என்று சீஷர் ஒருவரை ஒருவர் விசாரித்தனர்.

தாம் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை என்று யேசு அறிந்தார். "மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள்; உலகம் சந்தோஷப்படும்; நீங்களோ துக்கப் படுவீர்கள்; ஆனால், உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்."

யேசு பாடுபடும் வேளை சீஷர் துக்கப்படுவார்கள். உத்தான ஆதிநாள் காலை அவர்களுடைய துக்கம் சந்தோஷமாக மாறும். அந்நாளில் அவர் உயிர்த்து எழுவார்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## புதுமை வரவணிக்கம்

அன்று இரவு சிஸ்றர் கத்தறீன் படுக்கையிலே இருக்கையில் ஓர் சப்தத்தைக் கேட்டா. கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தா. அருகில் ஒரு சிறு பையன் நிற்பதைக் கண்டா. தனது காவற் சம்மனசானவர் என அறிந்தா.

"பரிசுத்த கன்னிகை கோவிலில் உமக்காகக் காத்திருக்கிறார்; உடனே பீடத்தண்டை வாரும்" என்றார் சம்மனசானவர்.

உடனே கத்தறீன் எழுந்து காவற் சம்மனசானவருடன் சென்றா. அங்கே தேவதாயார் நிற்பதைக் கண்டா. தனக்காகப் பிரதான சிலவேலைகள் செய்யும்படி தேவதாயார் அவவைக் கேட்டுக் கொண்டார்.

புதுமை வரவணிக்கம் பற்றித் தேவதாயார் கத்தறீனுக்கு அறிவித்தார். தமது மகிமைக்காக அந்தவரவணிக்கம் எவ்வாறு செய்யப்பட வேண்டும்என்று அறிவித்தார். "கட்டளைச் சுவாமியாருடன் இதைப்பற்றிச் சம்பாஷி; இந்த வரவணிக்கம் அணிந்து கொள்பவருக்கு நாம் விசேஷ உதவி செய்வோம்" என்றார்.

அடுத்தநாள் காலையே குருவானவரிடம் சிஸ்றர் சென்றா. மாதா தனக்குத் தரிசன மானதையும், புதுமை வரவணிக்கம் [illegible]ணக் கேட்டுக் கொண்டதையும் அறிவித்தா.

"நீர் சொல்வதை எப்படி நம்புவது? இது ஓர் கனவாய் இருக்க மாட்டாதா?" என்றார் சுவாமியார்.

கத்தறீன் மாதாவைப் பார்த்து அதிகம் உருக்கத்துடன் செபித்து வந்தா. அவவுடைய செபததின்பலனாக, மாதா காட்சி யளித்தது உண்மை என்று சுவாமியார் கண்டு கொண்டார். மாதா கேட்டுக் கொண்ட மாதிரிப்படி வரவணிக்கம் செய்யப் பட்டது. அதனை அணிந்தவர்கள் எல்லாரும் விசேஷ சகாயங்களும், புதுமைகளும் மாதாவிடமிருந்து பெற்றுவந்தார்கள். வியாதிக்காரர் ஆரோக்கியம் அடைந்தனர். பாவிகள் தங்கள் பாவநிலையை உணர்ந்து மனஸ்தாபப் பட்டு மனந்திரும்பினர்.

இவ்வாறே இந்த வரவணிக்கங் கொண்டு மாதா அநேகமாயிரம் புதுமைகள் செய்து கொண்டுவந்தார். இதனைப் புதுமை வரவணிக்கம் என்று அழைக்கிறோம். சிஸ்றர் கத்தறீன் 1947-ம் ஆண்டு ஆடிமாதம் 27-ந் திகதி 12-ம் பத்திநாத பாப்பாசரால் அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப்பட்டு இன்று மோட்சத்தில் மகிமையுடன் வீற்றிருக்கிறா.

— எம். ஜெயம்

## சைக்கிள் பரிசு

தன்னைப் போலும் மற்றச் சிறுவர்கள் சைக்கிளில் ஓடுவதைக் கண்ட சாளிக்கு மனமே உடைந்து விட்டது. அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்கு ஒரே பெருமூச்சுத் தான். "எனக்கும் ஒரு சைக்கிள் இருந்தால் எவ்வளவு இலேசாகப் போகலாம் கடைக்கு! அங்கும் இங்கும் சுற்றலாம! கோவிலுக்கும விரைந்து போகலாம்!" இரவிலே படுக்கையில் படுத்துக்கொண்டே இதைப்பற்றி யோசித்தான். பிறகு அதேநினைவில் தூங்கி விட்டான்.

தகப்பனைக் கேட்பதில் பயன் இல்லை. அவரைக் கேட்கும் போதெல்லாம் அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டு கேளாதவர் போல் இருக்கிறார். அவர் கவலை அவருக்கு. பத்துவயதுச் சிறுவனுக்கு அவரின் துன்பங்களைப் பற்றி என்ன தெரியும்? சாளி காசு சேர்த்து எப்படியும் ஒரு சைக்கிள் வாங்க வேண்டும் என்று நினைத்தான். ஆனால், சதங்கள் தான் சேர்க்க முடிந்தது. இவற்றைக் கொண்டு என்ன சைக்கிள் [illegible] முடியும்? அவனுக்கு ஓர் யோசனை தோன்றியது. அம்மா எனக்குச் சொல்லித் தந்திருக்கிறா, ஏழைகட்குத் தேவதாய் உதவுவா என்று; நல்லது, அவவைக் கேட்டுப் பார்ப்போம் என்று அன்று முதல் தினமும் அவன் தேவதாயை மன்றாடி வந்தான். அப்படியிருக்க ஒரு நாள் மாதாவின் ஏவுதலால் போலும் ஒரு கனவான் சாளியின் வீட்டுக்கு வந்தார்.

"நான் காலையிலே ஆபீசுக்குப் போனபிறகு எனது பிள்ளைகளைக் கவனிக்க ஓர் ஆள் வேண்டும்" என்று அவர் கூறினர்.

"சரி, தேடிப் பார்க்கிறேன்; கிடைத்ததும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்றாள் அவன் தாய். அப்போது அவர்கள் பேசியதைச் சாளி சன்னலுக்கு வெளியே நின்று கேட்டுக் கொண்டு நின்றான்.

"ஏன் அம்மா! நான் அதைச் செய்யக் கூடாதா? அந்தப் பிள்ளைகளை நான் கவனித்துக் கொள்வேன்" என்றான். தாய் சாளியை எட்டிப் பார்த்தாள்.

"உன்னால் அவர்களைக் கவனிக்க முடியுமா?"

"என்னால் கவனிக்க முடியுமா, இல்லையா என்பதை இருந்து பாருங்களேன்; கொஞ்ச நாளைக்குப் பிறகு உங்களுக்கு எல்லாம் தெரிய வரும் தானே."

கனவானுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டானது. அவருடைய பிள்ளைகள் இரண்டும் சாளியோடு ஒட்டிக் கொண்டன. அவன் மணலிலே வீடு கட்டி விளையாட்டுக் காண்பிப்பான். சிலவேளை சிறு குழந்தை தூங்கி விடும். அதை அப்படியே தூக்கம் கலையாமல் தோளிலே சாத்திக் கொள்வான்.

கனவானுக்குச் சாளியின் மேல் மிகுந்த பிரியம் ஏற்பட்டு விட்டது. முதலில் அவனுக்குச் சம்பளம் கொடுப்பதாகப் பேச்சு. ஆனால், கனவானுக்கு உண்டான சந்தோஷம் காரணமாக, அவன் விரும்பும் பரிசு ஒன்றை அவனுக்குக் கொடுக்க எண்ணினர்.

தனது எண்ணம் நிறைவேறியதை நினைத்துச் சாளிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சந்தோஷ மிகுதியால் அவன் துள்ளிக் கொண்டு தான் பரிசாகப் பெற்ற சைக்கிளில் ஏறினன். அதைச் செலுத்திக் கொண்டு மாதாவின் கோவிலை நோக்கிச் சிட்டாய்ப் பறந்தான்.

இ. இராக்கினி,
அர்ச். அன்னம்மாள் பாடசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர்பக்கத் தொடர்ச்சி

## பாத்திமா கேக்

சாயந்தரம் பாடசாலைமுடிந்து வீடு வந்து சேர்ந்ததும் சூசனும், தமையன் பிரான்சீஸும் தேநீர் பருக அசன மேசை சென்றனர். அங்கே இருவரும் அம்மா, அப்பாவுடன் ஆசனங்களில் அமர்ந்தனர். அம்மா கேக் பீங்கானைச் சூசனுக்குமுன் எடுத்துவைத்தாள்.

"உபகாரம் அம்மா, எனக்குவேண்டாம்" என்ருள் சூசன்.

"என்ன சூசன், இன்று கேக் பீங்கானை நாடுகிருயில்லை" என்ருர் அப்பா.

"ஆம், அப்பா! இந்தக்கேக் ஆத்துமாக்களை இரட்சிக்கும் ஒரு வழியாய் இருக்கிறது அல்லவா?" என்ருள் சூசன்.

பிரான்சீஸ் அவளைப் பரிகாசம் பண்ணிக் கொண்டு: "இப்போ இன்னும் தபசுகாலம் ஆகவில்லையே; நான் பெரிய கேக் துண்டு எடுக்கிறேன்" என்ருன்.

"அண்ணு! தபசு காலத்தில் மாத்திரம்தாஞ ஒறுத்தல் செய்வது? நேற்று சிஸ்றர் வாசித்த கதை உனக்கு ஞாபகம் இல்லையா? பாத்திமாவில் மாதா மூன்று சிறுவருக்குக் காணப்பட்டு என்ன சொன்ளு? ஆத்துமங்களை நரகத்தில் விழாமல் காப்பாற்றச் செபமும், தபமும செய்ய வேணடும் என்றும், குடும்ப செபமாலை செபிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிருு அல்லவா?"

"ஆம், சூசன்! நாங்களும் வகுப்பில் இதைப் பற்றிப் படித்திருக்கிறோம்; பாவிகளுக்காக என்ன செய்யலாம் என்றுதான் யோசிக்கிறேன்; நாங்கள் எல்லாரும் ஒவ்வொரு நாளும் நாட்பூசை கண்டு ஒப்புக் கொடுப்போம்; அத்துடன் இப்போ எனக்கு நல்ல பசியாய் இருக்கிறது; சூசனைப் போல் நானும் இந்த நேரம் ஆத்துமங்களுக்காக ஒறுத்தல் செய்யலாம் என்று யோசிக்கிறேன்" என்ருன் பிரான்சீஸ்.

"அப்படியாஞல் நாங்களும் குடும்பமாகச் சேர்ந்து குடும்ப செபமாலை சொல்லி, மாதா கேட்டதைச் செய்து ஒப்புக் கொடுக்கலாமே; இன்று இரவே குடும்ப செபமாலை செபிக்கத் தொடங்குவோம்" என்ருர் அப்பா.

அன்று தொடக்கம் அந்தக் குடும்பத்தில் குடும்ப செபமாலை செபிக்கும் வழக்கம் இருந்து கொண்டே வருகிறது.

சூசனின் பாத்திமாக் கேக் செய்த மகத்தான வேலையைப் பார்த்தீர்களா? நீங்கள் மாதாவுக்காக என்ன செய்து வருகிறீர்கள்?

— J. M. J.

## கண்டு பிடியுங்கள்

❀ நத்தால்தினமும் புதுவருடப் பிறப்புத்தினமும் எப்போது அதேவருடத்தில், அதேதினத்தில் வருகின்றன?

* * *

ஏழெழுத்துக் கொண்ட ஒருவரின் பெயர். அதில் 1-ம் 2-ம் 6-ம் 7-ம் எழுத்துக்கள் உழைப்பின் காரணத்தைக் குறிக்கும்.

3-ம் 4-ம் 5-ம் 6-ம் 7-ம் எழுத்துக்கள் ஓர் விலை உயர்ந்த பொருளின் பெயரைக் குறிக்கும்.

2-ம் 6-ம 7-ம் எழுத்துக்கள் கொடிய விலங்குகள் வசிக்கும் இடத்தின் பெயரைக் குறிக்கும்.

5-ம் 6-ம் 7-ம் எழுத்துக்கள் நாளின் மறுகருத்தைக் குறிக்கும்.

அந்த ஒருவரின் பெயர் என்ன?

[illegible]

எஸ். எம். லெஸ்லி
அர்ச். சவேரியார் கல்லூரி,
மன்னார்.

❀ ஒவ்வொருவருடமுமே.

புத்தக மதிப்புரைகள்

## சொந்தத் தொழில்

எழுதியவர்: திரு. ஆர். தயாநிதி (ஆசிரியர் உலகம்) திருச்சிராப்பள்ளி.
பிரசுரம்: கஸ்தூரி பதிப்பகம், உறையூர், திருச்சிராப்பள்ளி.
விலை: ரூ. 1—8—0

ஒருநாட்டின் சொந்தத் தொழில்களிலேதான் அந்நாட்டின் பொருளாதாரவளம் தங்கியிருக்கின்றது. சொந்தத்தொழில் மேன்மையானது என்பதை யாவரும் பேச்சளவில் ஒப்புக் கொள்வார்கள். ஆனால், செயலில் சாதிப்பது அரிது. சொந்தத்தொழில் செய்து வெற்றியீட்டுவதற்கான உபாயங்கள் பலஉள. அவ்உபாயங்களை — தொழில்வெற்றியின் இரகசியங்களை ஆசிரியர்தயாநிதிஅவர்கள் விளக்கமாக இந்நூலிலே எடுத்துக் காட்டுகிருர். இன்னும் சிறுதொழில்கள்பற்றிய விபரங்கள் அனுபந்தமாக இதிலே சேர்க்கப்பட்டுள்ளன. தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை, பால்பண்ணை, கயிறு, சோப்பு முதலிய தொழில்களை நடாத்தும் முறைகளைப் பற்றிய விபரங்கள் இதிலேகூறப்பட்டிருக்கின்றன.

'என்னசெய்வது' என்று ஏங்கித் தவித்துநிற்கும் வேலையற்றமக்களுக்கு அவர்கள்வாழ்க்கையில் நம்பிக்கை யூட்டி ஏதாவது தொழில்முயற்சியில் ஈடுபட உதவிசெய்யும் வழிகாட்டியாக இந்நூல் அமையுமென்பது எமதுநம்பிக்கையாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## "மாயூரம் முனிசீப்"

### வேதநாயகம்பிள்ளை வரலாறும் நூலாராய்ச்சியும்

எழுதியவர்: இராவ்சாகிப் கு. அருணசலக் கவுண்டர்
பிரசுரம்: தி அலய்டு பப்ளிஷிங் கம்பெனி, பிலிப்ஸ் தெரு, சென்னை—1.
விலை: ரூபா 1—8—0.

கடந்தநூற்றுண்டின் மத்தியிலே தமிழகத்தில்வாழ்ந்த பெரியார்களில் வேதநாயகம்பிள்ளையும் ஒருவராவர். அவர் மாயூரத்தில் முனிசீப்உத்தியோகம் வகித்திருந்தமையால் மாயூரம் முனிசீப் வேதநாயகம்பிள்ளையென அழைக்கப்பட்டார். இவர் உத்தம நீதிபதியாய் விளங்கியதோடு, சிறந்த புலவராகவும் திகழ்ந்தார். அத்தோடு மாயூரம்நகர்மன்றத் தலைவராகவும் கடமையாற்றிப் புகழ்பெற்ருர். இவ் உத்தமரை ஆசிரியர் இந்நூலிலே அழகாகநமக்கு அறிமுகம்செய்து வைக்கிருர். அதாவது, "வேதநாயகம் வெகுகாலமாய்த் தூக்கத்திலே அமிழ்ந்துகிடந்த தமிழரை விழிக்கச் செய்தார்; தமிழர்மனத்திலே தேசபக்திஎன்ற கனலைமூட்டினூர்; நமது மூதாதையர் மாண்புகளையும், மகிமைகளையும் சிந்திக்கச்செய்தார்; அவற்றின் அடிப்படையிலே, காலகதிக்குத்தக நமது சமூகஅமைப்பை மாற்றிப் புதுமாதிரிகைகளுக்குப் பொருந்தச் செய்து, உலகிலே புகழ்வாய்ந்த சனசமூகங்களில் தமிழர்சமுதாயமும் ஒன்ருக விளங்குமாறு உதவிசெய்தார்" என்பதாம்.

வேதநாயகம்பிள்ளைஅவர்கள் எழுதியநூல்கள் இறவாப்புகழ்படைத்தன. இக்கால வசனநடைக்கும், கற்பிதக்கதைகள் புனைவதற்கும் அவரே வழிகாட்டியுமாவர். வசனம்வரைவதில் வல்லுனராகிய ஆறுமுகநாவலருடனும், மலைமலையாகப் பாடிக்குவித்த புலவர்திலகம் மீனுட்சிசுந்தரம்பிள்ளையுடனும் ஒப்பவைத்து எண்ணப்படத்தக்க இயல்புவாய்ந்தவர். அன்னரது பிரதாபமுதலியார் சரித்திரமே அவரது அறிவுத்திறனையும், ஆற்றலையும் எடுத்தியம்புவதாகும்.

இத்தகைய சிறப்புவாய்ந்த தமிழ்ப் பெரியாராகிய வேதநாயகம்பிள்ளையின் வாழ்க்கைவரலாறும், நூலாராய்ச்சியும்பற்றி இந்நூலின்கண் ஆசிரியர் இனிதாக விளக்கியிருக்கிருர்.

புலவர்பிரானின் சரித்திரத்தை விளக்குவதோடு, இற்றைக்கு நூறு ஆண்டுகளின்முன்னர் தமிழகத்தின் நிலை எவ்வாறிருந்த தென்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிருர். இடையிடையேமிளிரும் வேதநாயகம்பிள்ளை அவர்களின் கருத்துவளம்நிரம்பிய பாடல்கள் நூலுக்குத் தனியழகைத் தந்துநிற்கின்றன. கவிராட்சசன் எனப் புகழப்பட்ட மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளையுடனும், பண்டாரசந்நிதிகள் ஸ்ரீசுப்பிரமணியதேசிகருடனும் கொண்டுள்ள நட்புத்தொடர்பு பற்றியபாடம் பன்முறையும் படித்துப்படித்து இன்பம்துய்ப்பதற்குரிய இலக்கியவிருந்தாக அமைந்துள்ளது. இன்னும் வேதநாயகம்பிள்ளை அவர்கள் எழுதியநூல்களை வகைவகையாகத் தரப்படுத்திப் பரிசீலனைசெய்து காட்டியிருக்கிருர். அந்நூல்களை ஆராய்ச்சிசெய்து எழுதியவிமர்சனங்களே அந்நூல்களைப் படியாதாரைப் படிக்கும்படி தூண்டச்செய்யும் பெற்றி வாய்ந்தனவாக அமைந்திருக்கின்றன.

பெரியோர்களின் வாழ்க்கைவரலாறுகளைக் கற்பதால் பெரும்பயன்உண்டு. கற்பவரின்வாழ்வைத் தூய்மைப்படுத்த வல்ல ஆற்றல் அவற்றிற்குண்டு. ஆனல், இத்தகைய வாழ்க்கைவரலாற்றுநூல்கள் தமிழில் அதிகம்இல்லாமை வருந்தத்தக்கது. அவ்வாறுள்ள சிலநூல்களும் நிரம்பிய கல்வியறிவுடையோர் மாத்திரமே விளங்கத்தக்கவகையில் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியரது இந்நூலோ சாதாரணமக்களும் படித்துப் பயனடையத்தக்க தெள்ளியநடையில் அமைந்திருப்பது போற்றத்தக்கதாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

## சமதர்மமும் சமூகதர்மமும்

ஆக்கியோன்: ரி. ஸ்ரீநிவாசன், எம். ஏ., எல். ரி. சரித்திர பேராசிரியர், புனிதசூசை கல்லூரி, திருச்சிராப்பள்ளி.
பிரசுரம்: தமிழ் இலக்கியக் கழகம் தூத்துக்குடி.
விலை: அணு 12.

"இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?" என்றமனப்பாங்கோடு நாம்வாழ்ந்தகாலம் மலையேறிவிட்டது. இன்று நாம் சுதந்திரம் பெற்றுள்ளோம். பெற்றசுதந்திரத்தைப் பேணிக்காப்பது நமதுகடன். அதற்கு அரசியலறிவு தேவை. அரசியல் சம்பந்தமான கொள்கைகள்பல. அக்கொள்கைகளை இலட்சியமாகக் கொண்ட அரசியற்கட்சிகள்பல உருவாகியிருக்கின்றன. அக்கட்சிகளின் கொள்கைகளையும், நோக்கங்களையும் நாம் அறிந்திருத்தல் அகத்தியமாகும்.

இந்நூலிலே ஆசிரியர் பலவகையான அரசியற் கொள்கைகளைப் பற்றித் தெளிவாகவிளக்குகிருர். சிறப்பாகக் கம்யூனிஸ்தகொள்கைகள்பற்றி நிதானமாக ஆராய்கிருர். 'நாக்கிழியக் கம்யூனிஸத்தைத்தாக்குவது வீண்முயற்சி; அதிலுள்ள நன்மையைக்கண்டு அதை எடுத்துக்கொள்வது விவேகம்" என்று நூன்முகத்தில் காட்டியிருப்பதே சமநிலைதவருத அவரதுதீர்ப்புக்குத் தக்க அத்தாட்சியாகும்.

"கம்யூனிஸம் வளரும் சக்தி; புதுயுகத்தின் தத்துவம்" என்றெல்லாம் ஒருசாரார் புகழ்கிருர்கள். ருஷியாவினதும், சீனுவினதும் வளர்ச்சியையும் உதாரணமாகக் காட்டுகிருர்கள். பொருளாதாரத்துறையில் அந்நாடுகள் வளம்பெற்ற வகைகுறித்து மக்கள் அச்சரியமுறுதல் இயற்கையே! இந்நூலிலே இதற்கான காரணங்கள் ஆராய்வாக விளக்கப்பட்டிருப்பதோடு கம்யூனிஸத்தின் அபாயகரமும் அழகாக எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது.

"சமூதாயமென்பது ஒரு கட்டிடம். குடும்பங்களாகிய செங்கற்களாலேயே கட்டப்பட்டது. குடும்பம் அழிந்தால் சமுதாயம் அழிந்துவிடும். இதுதான் சரித்திரம் நமக்குப் படிப்பிக்கிறபாடம். குடும்பமும் சமுதாயமும் சுதந்திரமில்லாவிடில் நசித்துப்போகும். அரசாங்கத்துக்கு ஏவல்செய்வது, அரசாங்கமே கூலிவழங்குவது என்பது சமுதாய அமைப்பிற்குச் சிறந்ததன்று. ஆடுமாடுகளின் நிலைமையே அது. இத்தகைய சமுதாயம் பாலுந்தேனும் கரைபுரண்டோடினும் அது மனிதருக்குத் தகுந்ததன்று" என்று கம்யூனிஸத்தின் கெடுதியை இரத்தினச் சுருக்கமாக விளக்கியவகை பாராட்டத்தக்கதாகும்.

தமிழிலே அரசியல் சம்பந்தமான நூல்கள் அருமையாகவே யுள்ளன. அக்கருத்துக்களை விளக்கிஎழுதுவதும் கடினமானது. அங்ஙனமாகவும் இந்நூல் சாதாரணமக்களும் படித்துணருமாறு தெள்ளியநடையிலே சிறந்த இலக்கியநூல்போல மிளிர்கின்றது.

கம்யூனிஸம் நமது வீட்டு வாயிற்படியில் கால்வைத்துநிற்கும் இவ்வேளையிலே இந்நூல் வெளிவந்ததையிட்டுப் பெரிதும் மகிழ்கின்றோம். ஏனென்ருல், அதனை "மித்துருவாக வரவேற்பதா? அன்றேல் சத்துருவாக விரட்டுவதா? என்பதற்கான ஆலோசனைகள் இதன்கண் காணப்படுவதால். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம.



### வண. எஸ். எ. பெஞ்சமின் சுவாமிஅவர்களின் 16-ம் வருட மரணஞாபகம்

வைகாசி 13-ந் திகதி வியாழக்கிழமை

"மண்ணுக்குள் உங்கள் உடல் மறைந்தாலும் என்மனக்கண்ணுக்குள் உங்கள் உருவம் கணப்போதும் நீங்கிடாதே."

இதைக் கண்ணுறும் வண. சுவாமிமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமார், அவரால் ஆன்மலாப மடைந்தவர்கள் எல்லாரும் அவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்ருடும்படி தாழ்மையாய் வேண்டுகிறேன். எங்கள் கோவிலில் பூசைவைக்கப்படும்.

வதிரி பி. லுக்கேஸ்பிள்ளை
6-5-54

### நன்றியறிந்த தோத்திரங்கள்

அர்ச். சதாசகாயமாதாவினதும் அர்ச். அந்தோனியாரதும் வேண்டுதலினுல் நான்கேட்டமன்ருட்டு அனுகூலமானபடியால் அவர்களுடைய நாமத்துக்குத் தோத்திரமாக நேர்த்திப்படிஇதனைப் பிரசுரிக்கின்றேன்.

வற்ருப்பளை பி. மேரி

* * *

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், சதாசகாயமாதாவினதும், அர்ச். ரீத்தம்மாளினதும் மன்ருட்டினுலும் நான் கேட்ட மூன்றுமன்ருட்டுகளும் அனுகூலமாயின. (1) எனதுபேரன் மனந்திரும்பினூ. (2) அவர் எடுத்தபரீட்சையில் சித்தியடைந்தார். (3) அவருக்கு நல்லஉத்தியோகம்கிடைத்தது. அதனுல் அவர்களின் நாமத்துக்குத் தோத்திரமாக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

வெள்ளவத்தை எம். எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்கநேரத்தில் சம்பாவனே அளிப்பார்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றேன் ; ஆனுல், பெட்டியைத் திறக்க முடியவில்லை; ஆதலின் ஒருசூழ்ச்சி செய்தேன் ; மலையில்வசித்த கிறே என்பவர் கடின நோயுற்றிருப்பதாகவும், உங்களைப்பார்க்க விரும்புவதாகவும் ஓர் இரவு உங்களிடம் அறிவிக்கும்படி செய்தேன் ; நீங்கள் அறியாவண்ணம் உங்களை நான் பின்தொடர்ந்தேன். நீங்கள் பலமுறை நின்று திரும்பிப் பார்த்தீர்கள் ; இரும்புப்பெட்டியின் சாவி எப்பொழுதும் உங்களுடன் இருந்ததென நான்அறிவேன் ; ஆதலின் உங்களைத் தலையில்அடித்து விழத் தாட்டவும், அவசியமானுல், கொலை செய்யவும் தீர்மானித் திருந்தேன்'' என்று நோயாளிகூறி அனுப்பினுல், சாய்ந்துவிட்டான். குருவானவர் அவனுக்குக் குடிக்கத் தணணீர்கொடுத்து "என்னை ஏன் விழத்தாட்டவில்லை?" என்றுர்.

"உங்களுடன் காவலுக்கு ஒருவாலிபன் சென்றுனே ; நான் இருவரையும் எப்படித் தாக்கமுடியும்?" என்று அவன்கூறியதும், சுவாமியார்பிரமிப்புடன் : "என்னுடன்ஒருவரும் வரவில்லையே; நான் தனிமையாகவே சென்றேன் !" என்றுர்.

"இல்லை இல்லை ; உங்களுடன் ஒரு வாலிபன்—பலம்வாய்ந்த ஒருவாலிபன் வந்தான் ; அவன் உங்கள்அருகே நடந்துவந்தான் ; உங்கள் இருவரையும் சுற்றிஅழகியபிரகாசம் காணப்பட்டது; அந்தநிலையில் நான் வேறுபேருடன் வந்தாலும் உங்களைத் தாக்கமுடியாதே; அப்படியிருக்கத் தனிமையாக உங்களை எப்படித் தாக்கத்துணிவேன் ?" என்றுன் அவன்.

"திவ்விய சற்பிரசாதத்தின் தூதன் ஒருவர் அன்று என்னுடன் வந்திருக்க வேண்டும் ; அதைநான் அறியவில்லை" என்று சுவாமியார் கூறினுர்.

"அவர்யாரென எனக்குத் தெரியாது ; அன்று முதல் நான் களவுசெய்வதையே விட்டுவிட்டேன் ; இப்பொழுது என்நேரம் கிட்டிவிட்டது" என அவன்கூறினுன்.

"நீ நெடுநாள் உயிர்வாழ மாட்டாய் என்று சொல்லுகிறுய் ; அப்படியானுல் நீ கண்ட இந்தஅதிசய சம்பவத்தைப் பயன்படுத்தி ஏன் நலம்பெறக்கூடாது?" என்று சுவாமியார்வினவியதும், அவன்: "எவ்விதம்நலம்பெறுவது?" என்றுன்.

கத்தோலிக்கமறையைப்பற்றிக் குருவானவர் எடுத்துரைத்து மனஅமைதியுடன் மரிக்கும்வழியை அவனுக்குக் காண்பித்தார். அவன் சந்தோஷத்துடன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான்.

சிலநாட்களுக்குப்பின் குருவானவர் அவனுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுதுஅவன் : "சுவாமி, அந்த இரகசியம் எனக்கு இப்பொழுது விளங்குகிறது ; அன்றிரவு நீங்கள் திவ்வியநற்கருணையை உங்களுடன் எடுத்துச்சென்றீர்கள்; அதில்நீங்கள்கிறீஸ்துநாதரைப் பார்க்காவிட்டாலும் அவர் இருக்கிறுர் என விசுவசிக்கிறீர்கள் ; திருடனுகிய நான் உங்களைத் தாக்க நினைத்தேன் ; உங்களைத்தாக்கி விழத்தாட்டியபின், இரும்புப்பெட்டிச்சாவியைத் தேடியிருப்பேன் ; தேடுகையில், உங்கள்மீதிருந்த திவ்வியநற்கருணைச் சிமிழைஎடுத்து அதைஒருவேளை அவமானப்படுத்தியிருப்பேன்; இந்தத்தேவதுரோகம்நடவாது தடுக்கும்படியே,பார்க்கமுடியாத பரலோகதூதன் உங்கள் அருகேவந்து இந்த ஆஸ்பத்திரியில் நாம் இருவரும் சந்திக்கும்படி செய்திருக்கிறுர் ; பெரும் அக்கிரமியாகிய என்மேல் கடவுள் இத்தனை இரக்கம் காண்பித்து என்னைமன்னிக்கும்படி நான் என்னசெய்தேன் ?" என்றுன்.

"மகனே, கடவுளுடையவழிகளுக்கும், மனிதனுடைய வழிகளுக்கும் பாராதூரவித்தியாசம் ; உனக்கு இவ்விதபாக்கியமானமுடிவு கிடைக்கும்படி நீ உன்வாழ்நாளில் நீஏதாவது நன்மை செய்திருக்கவேண்டும் ; அதுஎன்ன ? யோசித்துச்சொல்'' என்று சுவாமியார் கேட்டார்.

"நன்மைசெய்வது நானு?... ஒருவேளை நான் வீரத்தினுல் தூண்டப்பட்டுச் செய்த ஒருகாரியத்தை ஒருவேளை நீங்கள் நன்மையாகக் கருதலாம். ஒருமுறைநான் எண்ணெய்ச் சுரங்கத்தில் வேலைசெய்கையில், சிலகன்னியாஸ்திரிமார் தங்கள் விடுதியிலுள்ள ஏழை வயோதிபர்களுக்காகத் தருமம்கேட்க வந்தனர். சுரங்கங்களில் இருந்த அதிகாரிகள் மரியாதையற்றவர்கள் ; அந்தப்பெண்மணிகளை மதிக்கமாட்டார்கள் ; நிந்திப்பார்கள் ; ஆதலின் கன்னியாஸ்திரிமாரை வெளியே நிற்கச்சொல்லி, நானே உட்சென்று அவர்களுக்காகப் பெருந்தொகையைச் சேகரித்தேன் ; அதை அவர்களுடைய பையிற்போட்டுக் கொடுக்கையில் : "ஐயா, கடவுள் உங்களைக் கைவிடமாட்டார்; தக்கநேரத்தில் சம்பாவனை அளிப்பார்" என்றுர்கள். "அவர் சம்பாவனையைக் கொடுத்துவிட்டார்; அவருடையநாமம் புகழப்படக்கடவது" என்றுன்.

## அரசாங்க அறிவித்தல்

N. 1064— 15-5-54 காலை 9மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையில் பின்வருவன பகிரங்கஏலத்தில் விற்கப்படும். விற்பனவுக்குமுன் அவற்றைப் பார்க்கவிரும்புவோர் டிப்போக்கீப்பரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

121 கூறுகள்அடங்கிய 121 முதிரை மரங்கள்—1317·6அடிகள்.

1 கூறுஅடங்கிய 1 பாலைமரம் 1—8·4 அடிகள்.

9 கூறுகள்அடங்கிய 9கூறுஅரிந்தமரங்கள்— 512·3 அடிகள். ஒவ்வொருகூறும் ஏறக்குறைய 50 அடிகள்.

2 கூறுகள்அடங்கிய 2 கூறு சிலிப்பர் நுனித்துண்டுகள்—93·5 அடிகள். ஒவ்வொருகூறும் ஏறக்குறைய 50 அடிகள்.

## விற்பனைக்கு!

### தேவமாதாவின் வணக்கமாதம்

**பிரதிவிலை : ரூபா 1 சதம் 50.**

**மனேஜர்**
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயமாதாவுடைய புதுமையினுலே எனதிகடைசிப்புத்திரன் கடந்த ஒருவருஷகாலமாக ஓர்பெருந்நோயால் பீடிக்கப்பட்டிருந்தவர் குணமடைந்துவிட்டார். அவருடைய இடதுகாலுக்குக் கீழ்ப்பக்கத்தில் ஓர்கட்டி வளர்ந்துவந்தது. வீக்கமும், நோவும் அதிகமாக இருந்தபடியால் ஆங்கிலவைத்தியரிடம் மருந்துசெய்தோம். வீக்கம்குறைகிறதும், கூடுகிறதுமாக இருந்தது. இறுதியில் சிகிச்சைசெய்து கட்டியைக்கரைக்க வேண்டுமென்று வைத்தியர்சொன்னுர். அதற்குநான் இணங்காமல் சிங்களவைத்தியம் செய்தேன். அதற்கும் குணம்ஏற்படவில்லை. கடைசியாய்ச் சகாயமாதாவுடைய தஞ்சத்தைநாடினேன். நான் கேட்டபலன் கிடைத்தது. இப்போது அந்தக்கட்டி இருந்தஇடமும் தெரியாமல் மறைந்துவிட்டது. எனது புத்திரனும் நல்லசரீரசுகத்தோடு இருக்கிறுன். சதாசகாயமாதாவுடைய நாமம் என்றும் எல்லோராலும் புகழப்படுவதாக. நேர்த்திப்படி இதைநான் பிரசுரிக்கிறேன்.

வெள்ளவத்தை ஆர். எஸ்.


நுவரேலியா பூக்கள்


மே மாதம் மாதாவின் மாதம். மேலும் இவ்வருடம் மாதாவின் புனித வருடம். (MARIAN YEAR)

நாம் இம்மாதம் கொண்டாடும் நவநாட்களில் தேவதாயாருக்கு விசேஷவிதமாய் நாம் செலுத்தும் பக்தி முயற்சி ஒருக்காலும் வீண்போகாது. நவநாட் சாலங்களில் பீடம் ஜோடிக்க நுவரேலியா பூக்கள் (FRESH FLOWERS) வேண்டுமானுல், எம்மை ஞாபகப்படுத்திக் கொள்ளவும்.

பூக்கூடைஒன்றின் விலை ரூ 5/-, 7/50, 10/-, 15/-, 20/- & 25/-

S. A. பேர்னுந்து,
பூ, விதை வியாபாரி,
நுவரேலியா. (Nuwaraeliya)

தந்தி விலாசம் : "பாத்திமா"
மனேஜர் : ஜாண்டிக்நஸ்
ஸ்தாபகம் : 1942.
(முன்புவேசப் பத்திரிகைகளின் விற்பனையாளர்)


# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனுல் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறுன். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறுன். ஏதாவது அபாயம் நேருவதானுல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறுன். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ் :
69, இராணி வீதி — கொழும்பு.
Zeylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo


— இமயமலையிலே மகாஉன்னதமான எவரெஸ்ற்சிகரத்தை வெற்றிகொண்ட சேர் எட்மண்ட் ஹில்லறி அவர்களும், பிரித்தானிய மலையேறிகள் கோஷ்டியின் தலைவரான ஜோண் ஹண்ட் அவர்களும், 1952-ம் ஆண்டு சுவிஸ்மலையேறிகள் கோஷ்டியாரும் கணக்கிட்டு எவரெஸ்ற் சிகரத்தின் உயரம் 29,610 அடியென மதிப்பிட்டிருக்கின்றுர்கள். இதற்குமுன் அது 29,141 அடி உயரமுடையதென மதிப்பிடப்பட்டிருந்தது.

— இத்தாலியிலே மிலான்நகரின் பிரபலஅதிமேற்றிராணியாரான கருதினுல் சூஸ்தர்ஆண்டவர் சென்றபங்குனிமாதம் 19-ந் திகதியன்று தமது குருத்துவ தங்கயூபிலியையும், மேற்றிராணித்துவபதவிக்கும், கருதினுல்பதவிக்கும் உயர்த்தப்பெற்ற வெள்ளியூபிலிகளையும் ஒருங்கேகொண்டாடியபோது இருபதினுயிரம்பிள்ளைகள் சமுகமாயிருந்து அவருக்காக மன்றுடிக்கொண்டார்கள்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 6-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org